மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

லர் 3 | 1 - 2 - 55 | இதழ் 19



ர்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

பொற்கதிர் வாழியவே!

[கவிஞர் வாணிதாசன்]

தூற்றல் மழையைக் குளிரைப் பனியைத் தொடர்ந்துவந்த
காற்றுகும் வாடைப் பகையை நொறுக்கிக் கருங்கடல்மேல்
மாற்றுர்க் கொளியைத் தருமெங்கள் அண்ணாவின் வாயுரைபோல்
போற்ற எழுந்தது கிழ்க்கடல் பொற்கதிர்; வாழியவே!

செந்நெல் விளைத்துத் திருந்திய புன்செய் வெளியிலெங்கும்
கன்னல் விளைத்துக் கனிமலர் சிந்தித் திராவிடத்தின்
இன்னல் களைந்தது கிழ்க்கடல் பொற்கதிர்; எங்களண்ணா
சொன்னலம் போல வளப்பம் மிகுந்து தோன்றியதே!

செய்யின் விளைவைப் பசுங்காச் சிரிப்பை அழைத்துவந்த
தையின் முதல்நாள்! திராவிடர் பொன்னாள்! தனித்திருநாள்
வையத் திருளை அகற்றும் அறிஞர்அண் ணாத்துரைபோல்
மையைக் கிழித்தது கிழ்கடல் பொற்கதிர்! வாழியவே!

சூழிய நன்மை பகைமை தொலைக! அலைமுழக்கும்
ஆழிசூழ் கன்னித் தமிழ்மொழி வாழ்க! அறம்வளர்க!
வாழிய பொற்கதிர்! வாழிய அண்ணா! மறத்தமிழர்
வாழிய! வாழிய தாயகம்! வாழ்க திராவிடமே!!

[பொங்கல் இதழில் வெளியிடப்படவேண்டிய இக்கவிதை அவ்விதழில் இடமின்மையால் இவ்விதழில் வெளியிடப் பெறுகிறது.]

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1-2-55 செவ்வாய்க்கிழமை

ஆவடித் திருவிழா!

சென்னையை அடுத்த ஆவடியில், சனவரித் திங்கள் மூன்றாவது வாரத்தில் நடைபெற்ற, இந்திய தேசியக் காங்கிரசின் அறுபதாவது மாநாட்டின் நிகழ்வை, ஏறத்தாழ எல்லா தேசிய இதழ்களும் '**திருவிழா**' என்றே குறிப்பிட்டுப் பூரிப்பும் பெருமையும் பெருமிதமும் கொண்டன!

பெருந்திருவிழாவில் என்ன என்ன காட்சிகள் காணப்படுமோ அத்தகைய காட்சிகளும், என்ன என்ன நிகழ்ச்சிகள் நிகழுமோ அத்தகைய நிகழ்ச்சிகளும் ஒன்று தவறாமல் நிகழ்ந்தேறியிருக்கின்றன!

மாநாட்டின் வாயில் தென்னாட்டுக் கோயிலின் கோபுரம்போல் அமைந்திருந்ததானது, மாநாடு திருவிழாக் கோலம் கொள்வதற்கு ஏற்றவகையில் பொருத்தமாகவே இருந்தது என்னலாம். தலைவர்கள் 'உற்சவ மூர்த்தி'களாகக் காட்சியளித்திருக்கின்றனர்; பார்வையாளர்களும் 'பக்தகோடி'களாக இருந்து 'தரிசனம்' செய்திருக்கின்றனர். கோயிலில் பக்தகோடிகளுக்குப் புரியாத வடமொழி மந்தரம் சொல்லப்படுவதைப்போல, ஆவடித் திருவிழாவிலும் 'பக்தகோடி'களுக்குப் புரியாத வட இந்தி மொழிப் பேச்சுகள் பேசப்பட்டிருக்கின்றன. பெருங் காணிக்கைத் தருபவர்களுக்கே கோயில் சன்னிதானத்தில் முக்கிய இடங் கொடுப்பதைப்போல், பெருநன்கொடை தந்தவர்களுக்குமட்டுமே ஆவடி 'சன்னிதானத்'தில் முதலிடங்கொடுக்கப்பட்டிருக்கின்றது. கோயிலில் மூலவிக்ரகம் இருப்பதைப்போல் ஆவடியிலும் காந்தியார் உருவம் மேடையின் பின்னால் வைக்கப்பட்டிருந்திருக்கின்றது. கோயில் திருவிழாவில் காணப்படும் விளையாட்டு, வேடிக்கை, ஆட்டம், பாட்டம், கூத்து, கும்மாளம், ஆரவாரம், இடிநெருக்கடி, போவதும் வருவதுமான மக்கள் நடமாட்டம், இடித்துத் தள்ளுதல், விழுந்தெழுதல், தடுமாற்றம் அடைதல், ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து போதல், கிழவர் கிழவியர்—ஆடவர் பெண்டிர்—கணவர் மனைவியர்—காளையர் கன்னியர்—சிறுவர் சிறுமியர்—குழந்தைகள் ஆகிய பல திறத்தாரும் குடும்பமாகச் சென்று பார்த்தல், பசிகொண்டு சோறு கிடைக்காமல் திண்டாடுதல், வரட்சிகொண்டு நீர் கிடைக்காமல் தவித்தல், வெய்யிலில் வேர்த்து விறுவிறுத்தல், படுக்க இடங் கிடைக்காமல் சோர்தல், போக்குவரத்து வசதியில்லாமல் கால்நடையாக நடத்தல், சலித்துக்கொண்டு வீடுதிரும்புதல்—ஊர் திரும்புதல் போன்ற எல்லாம் ஆவடிக் காங்கிரச் மாநாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. கோயில் திருவிழாவில் கூடுவதைப்போன்ற பெருங்கூட்டம் ஆவடியிலும் கூடியிருக்கின்றது!

காங்கிரச் அன்பர்கள் கருத்துக்கிசைந்தபடி ஆவடிக் காங்கிரச் மாநாடு, அவர்களால் போற்றப்படுவதற்குரிய ஒரு கோயில் 'திருவிழா' போல் நடந்தேறியிருக்கிறது; நாம் கோயில் திருவிழாக்களை எப்படிக் கருதுகிறோமோ அப்படியே கருதுவதற்கான வகையில், நமது கருத்துப்படியும் ஆவடி மாநாடு ஒரு 'திருவிழா'வாகவே நடந்தேறியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

வடநாட்டுத் தலைவர்களும், வடநாட்டுக்காரர்களும் தென்னாட்டுத் தலைவர்களையும், தென்னாட்டுக்காரர்களையும், தென்னாட்டு மொழியையும் எந்த அளவுக்குக் கீழ்த்தரமாக மதிக்கிறார்கள் என்ற தெளிவுணர்வைப், பொதுவாகத் தென்னாட்டவர்க்கும், குறிப்பாகத் தென்னாட்டுக் காங்கிரஸ் தோழர்களுக்கும் ஒரு சிறிது அளவாவது ஆவடிக் காங்கிரஸ் உணர்த்தியிருக்கும் என்று கருதுகிறோம். அந்தவகையில் ஆவடி மாநாடு ஒருவித பலனைத் தந்தது என்றே கூறலாம்.

மாநாடு கூட்டப்பட்ட இடம் தமிழ்நாடு; கூடியிருந்த மக்களோ நூற்றுக்குத் தொண்ணூற்றைன்பது பேர்கள் தமிழர்கள்; கருத்துக்களை வெளியிட்டு விவாதித்துப் புரிந்துகொண்டு செயலாற்றுவதற்கே மாநாடு கூட்டப்பட்டது. ஆனால் அங்கு பேசப்பட்ட பேச்சுக்களோ முக்காலே மூன்றுவீசம் பகுதி இந்தியிலும், மீதமுள்ள வீசத்தில் முக்கால் பகுதி ஆங்கிலத்திலும், மீதமுள்ள கால்வீசம் பகுதி தமிழிலும் அமைந்திருக்கின்றன. இந்தி ஏகாதிபத்தியம் எந்த அளவுக்கு வெறிபிடித்து ஆடுகிறது என்பதை ஆவடிக் காங்கிரஸ் மாநாட்

டின்மூலம் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள லாம். எந்தமொழியில் யார் என்ன கருத்தைக் கூறினாலும், முழுக்க முழுக்கத் தமிழில் மொழி பெயர்த்துக் கூறவேண்டியதல்லவா, தமிழகத் தில் கூட்டப்பட்ட மாநாட்டின் நேர்மையும், நியாயமும் ஆன பண்பாகும்? ஏன் அந்தப் பண்பு காணப்படவில்லை? ஏன் காணப்பட வில்லை என்று கேள்வி எழுப்புவதைவிட, எப்படி அந்தப் பண்பினைக் காணப்பட விடு வார்கள் வடநாட்டு இந்திமொழி ஆதிக்கத் தலைவர்கள் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வது சிறந்தது.

மாநாட்டுத் தீர்மானங்கள் முடிவு செய்யும் ஆய்வுக் கூட்டத்தில் வடநாட்டுத் தலைவர்கள் பலரும் இந்தியில் பேசியிருக்கின்றனர். அவர் கள் இந்தியில் பேசும்போது தென்னாட்டுக் காரர்கள் அச்சடித்த பதுமைபோல் அப்படியே அசைவற்று இருந்து. பேசுவோரின் வாயின் அசைவினைக் கவனித்துக்கொண்டிருந்திருக் கின்றனர். ஒரு தீர்மானத்தைத் தோழர் ஆர், வெங்கட்டராமன் வழிமொழிந்து தமிழில் பேச ஆரம்பித்தவுடன், வடநாட்டுக்காரர்கள் சாரை சாரையாக வெளியேற, அப்பொழுது காங் கிரச் தலைவர் தோழர் தேபர் வெளியேறுபவர் கள் ஓசையிடாமல் வெளியேறவேண்டும் என்று அறிவுரை கூற நிகழ்ச்சி நடந்தேறி யிருக்கிறது. ஒரு தீர்மானத்தை மத்திய அரசாங்க மந்திரி ஒருவர் இந்தியில் முன் மொழிய, அதனை வழிமொழியவந்த மைசூரைச் சேர்ந்த தோழர் நிசலிங்கப்பா, முன் மொழிந்த வர் இந்தியில் பேசியதால், அவர் என்ன பேசினர் என்பதைத் தம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும், தாமும் தம்முடைய தாய் மொழியான கன்னடத்திலேயே பேச லாமா என்று நினைத்ததாகவும், ஆனால் இறு தியில் அந்த முடிவை மாற்றிக்கொண்டு ஆங் கிலத்திலே பேச முற்பட்டதாகவும் கூறியுள் ளார். தோழர் டி. செங்கல்வராயன் அவர் களும், தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களும் தமிழில் பேசும்போது வடநாட்டுக்காரர்கள் ஓசைகள் கிளப்பியது மட்டுமல்லாமல், அவர் களை உட்காரும்படி கூச்சலிட்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பலப்பல ஆவடி யில் நடந்தேறியிருக்கின்றன. வடநாட்டு இந்தி ஏகாதிபத்யம் எந்த அளவுக்கு ஆதிக் கம் நடத்துகிறது என்பதை, மேற்கண்ட நிகழ்ச்சிகள் மூலம், ஒரு சில நாணயமும் நேர் மையும் படைத்த காங்கிரஸ் தோழர்களாவது உணர்ந்துகொண்டிருப்பார்கள் என்று நம்பு கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆவடி[க்] காங்கிரசை ஒருவகையில் வரவேற்கவேண்டி[ய] நிலைமையில்தானிருக்கிறது. திராவிட முன் னேற்றக்கழகத்தின் கொள்கையான திராவி[ட] நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை, இதுவரை யில் அலட்சியப்படுத்திவந்த காங்கிரச் அதற்கு மதிப்புக்கொடுத்து எதிர்த்துத் தீர் வேண்டிய நிலைக்கு ஆவடியில் வந்துவிட்டது. நாட்டுப் பிரிவினை கோரிக்கையை எதிர்த்துத் தீர்மானம் கொண்டுவந்து, தோழர் பந்த் முன் மொழிய, தோழர் அனந்தசயனம் அய்யங்கார் வழிமொழிய நிறைவேற்றியிருக்கிறது. திரா விட முன்னேற்றக் கழகத்தின் சக்தி நாளுக்கு நாள் வளர்ந்துவருகிறது என்பதையும், அந்த வளர்ச்சியை இதுவரையில் அலட்சியப்படுத்தி வந்ததைப்போல் இனிக் காங்கிரசால் அலட்சி யப்படுத்திவிட்டு வாழமுடியாது என்பதையும் எதிர்த்து நிற்கவேண்டிய நிலைக்குக் காங்கிரச் வந்துவிட்டது என்பதையுந்தான் பிரிவினை எதிர்ப்புத் தீர்மானம் நாட்டிற்கு உணர்த்தி நிற்கிறது.

வடநாட்டுக் காங்கிரச் தலைவர்களின் மனப் பான்மையைப்பற்றியும், அவர்களின் ஆதிக் கப் போக்கைப் பற்றியும் திராவிட முன்னேற் றக்கழகத்தார் எடுத்துச் சொல்லும்போதெல் லாம் ஐயுறவும், அருவருப்பும் கொண்ட பொதுமக்களில் பலர், ஆவடி நிகழ்ச்சிகளைக் கண்டபிறகு, கழகத்தார் சொல்லுவது அவ் வளவும் உண்மை என்று தெளிவுபெறும் நிலைக்கு வந்திருப்பார்கள் என்றே கருது கிறோம்.

ஆவடிக் காங்கிரச் மாநாடு தன்னுடைய பொருளாதாரக் கொள்கை, இனி, "சோசி லிச மாதிரி"யில் அமைந்த ஒன்றாகவே இருக் கும் என்று தீர்மானம் செய்துள்ளது. பண்டித நேருவும், தேபரும் அந்த அடிப்படையில் கருத்து விளக்கஞ் செய்துள்ளார்கள். காங்கிரசில் இணைந்துள்ளவர்கள், அதனை ஆட்டிப் படைப்பவர்கள், அதனைத் தங்கள் வாழ்க்கை வசதிக்காக வைத்துக்கொண்டு, அதில் ஆதிக் கம் செலுத்துபவர்கள், தங்கள் முதலாளித்வப் பாதுகாப்பை அதனிடம் மட்டுமே பெறலாம் என்று நினைத்து அதில் சேர்ந்து அதில் இன் னமும் முக்கிய பங்கு வகித்துவருபவர்கள் ஆகியவர்களையும், காங்கிரசின் நிலைமை போக்கு ஆகியவற்றையும் நன்கு கவனிப்பவர் கள் காங்கிரசிடத்தில் "சோசியலிசத்தை" எதிர் பார்ப்பதைவிட, குதிரையிடத்தில் கொம்பினை எதிர்பார்ப்பது மேல் என்ற நிலைமைக்கு உடன் வந்தே தீருவார்கள். காங்கிரச் தலை

கருத்துக் கதிர்

சிலர் பலராவர்; கூச்சல் முழக்கமாகும்!

"ஒருபாக்கிச்தான் ஏற்பட்டுவிட்டது. மேலும் பாக்கிச்தான்களை ஏற்படுத்த முடியாது. திராவிடச்தான் என்று சிலர் கூச்சலிடுகின்றனர்" என்று தோழர் எம். அனந்தசயனம் அய்யங்கார் ஆவடிக் காங்கிரசின் தீர்மான ஆய்வுக்குழுக் கூட்டத்தில், பிரிவினை எதிர்ப்புத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பாக்கிச்தான் பிரிவினையைப் பற்றித் தோழர் ஜின்னா வலியுறுத்தியபோது, தோழர் அனந்தசயனம் போன்ற காங்கிரசுத் தலைவர்கள், அவரது கோரிக்கையைக் "கூச்சல்" என்று சொல்லித்தான் அலட்சியப்படுத்தி வந்தனர். ஆனால் அந்தக் கூச்சல் ஒரு காலத்தில் முழக்கமாக மாறத்தான் செய்தது. உலகில் பண்டுதொட்டு ஏகாதிபத்ய ஆட்சிப்பீடத்தில் ஏறிய ஒவ்வொருவரும், ஆதிபத்தியத்திற்கு எதிர்ப்பாகத் தோன்றிய ஒவ்வொரு உரிமை முழக்கத்தையும் கூச்சல் என்று கேலிசெய்ததோடு, உரிமை முழக்கமிட்டவர்களை அலட்சியம் செய்யவே செய்தனர். ஆனால் இறுதியில் ஒவ்வொரு நாட்டிலும் வரலாறு காட்டிவந்த பாடம்—காட்டிவரும் பாடம் ஆதிபத்யம் அடியோடு வீழும் என்பதும், "கூச்சல்" என்று கேலி செய்யப்படும் உரிமைக்குரல் உரிமை முழக்கமாக மாறும் என்பதும் ஆகும். இப்பொழுது தோழர் அனந்தசயனம் அய்யங்கார் ஆதிபத்ய போதையிலிருந்து பேசுகிறார்; ஆனால் அவர் குறிப்பிடும் சிலர் நாளடைவில் பலராக மாறுவார்கள் என்பதையும், கூச்சல் முழக்கமாக மாறும் என்பதையும் மிக விரைவில் அவர் உணர்வார்!

∘∘ ∘∘ ∘∘

கத்தரிக்காய் நாயனார்!

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவிடைமருதூரில் தெற்கு மடவிளாகத்தில் ஒருவர் கொல்லையில் ஒரு கத்தரிக்கன்றில் ஒரே காம்பில் ஐந்து கத்தரிக்காய்கள் காய்த்துத் தொங்குகின்றனவாம். ஐந்து கத்தரிக்காய்களுக்கும் ஒரே பாவாடைதானாம். இதைத் தெய்வீகம் என்று கருதி ஏராளமான மக்கள் சென்று வணங்கி வழிபட்டுவருகின்றனராம். சிலநாட்களுக்கு முன்பு திருச்சியில் பரங்கிப்பூ நாயனார் ஒருவர் படமெடுத்துக் காட்சிதந்தார்; அவர் நிலை இப்பொழுது என்ன ஆயிற்றோ, தெரியவில்லை! ஆனால் அவரைத் தொடர்ந்து கத்தரிக்காய் நாயனார் திருவிடைமருதூரில் முளைத்திருக்கிறார்! இப்படியாக எத்தனை நாயனார்கள் இன்னும் எத்தனை நாளுக்குத்தான் தோன்றிக் கொண்டிருப்பார்களோ? காலமே நீதான் பதில் கூறவேண்டும்!

∘∘ ∘∘ ∘∘

குழப்பத்திற்கு பொறுப்பு யார்?

"செகண்டரி கல்வியிலும் கல்லூரியிலும் ஒரே மொழி பயிற்சிமொழியாக இருக்கவேண்டும். பயிற்சி மொழி வெவ்வேறாக இருப்பதாலேயே இப்போது குழப்பம் ஏற்பட்டுள்ளது" என்று சென்னைக் கல்வியமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் சென்னையில் ஆசிரியர் சங்க மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். தாய்மொழித் தமிழை இரண்டு நிலையிலும் பயிற்சிமொழி ஆக்கலாமே? அதற்கான முயற்சி எடுக்கலாமே? இவற்றைக் கல்வியமைச்சர்தானே செய்யவேண்டும்? கல்வியமைச்சர் நினைத்தால் குழப்பத்தைப் போக்கலாமே? குழப்பத்திற்குப் பொறுப்பு அவர்தானேயொழிய வேறுயாருமில்லை!

∘∘ ∘∘ ∘∘

இழந்த செல்வாக்கை மீண்டும் திரட்டிக்கொள்ளவும், வருகின்ற பொதுத்தேர்தலில் மக்களின் நன்மதிப்பைப் பெறவும் "சோசியலிசம்" என்ற மதிப்புப்பெற்ற சொல்லைப் பயன்படுத்திப் பார்க்கிறது. அதைத் தவிர வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

என்னமோ காங்கிரசின் 'ஆவடித் திருவிழா' நடந்தேறிவிட்டது! இனி அடுத்தத் திருவிழா எங்கே என்பதுதான் கேள்வியாக இருக்க முடியும்! 'திருவிழா' சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்கு, சனநாயகத்தின்பேரால் நடைபெறும் சென்னைத் தனிக்கட்சி ஆதிக்க அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பு காரணம் என்றால் அது மிகையாகாது!

ஐ. நா. அவை கவனிக்குமா?

வெளிநாடுகளில் நிலவும் தமிழ்ப் பண்பாடு குறித்து, ஒரு பெரும் ஆராய்ச்சி நடத்த வேண்டுமென, ஐக்கியநாடுகள் அவையின் கல்வி, சமூகப், பண்பாட்டு நிறுவனத்திற்குத், தமிழ்ப் பேராசிரியர் எச். தனிநாயகம் அவர்கள், கோலாலம்பூரில் அண்மையில் நடந்த கூட்டமொன்றில் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார். இந்த வேண்டுகோள் நியாயமும், நேர்மையும், இன்றியமையாமையும் நிறைந்ததாகும்.

இதுகாறும் தோன்றிய மேனாட்டு ஆசிரியர்களும்சரி, ஐ. நா. அவையின் பண்பாட்டு நிறுவனமும் சரி வடமொழிக் கலாசாரத்தையே இந்தியக் கலாச்சாரமாகக் கருதி ஆராய்ச்சி நடத்திவந்தார்களே யல்லாமல், தமிழ்ப் பண்பாட்டை—நாகரிகத்தை தனியே பிரித்துக்காண அவர்கள் முற்படவேயில்லை. இந்தத் தவறு இனியும் தொடர்ந்து நடைபெறக்கூடாது என்பதைப் பேராசிரியர் தனிநாயகம் அவர்கள் நன்கு உணர்ந்த காரணத்தால்தான், மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்கள்.

அதே கூட்டத்தில் தோழர் தனிநாயகம் அவர்கள் மேலும் பேசும்போது, "இந்தியக் கலாச்சாரம் என்பதில் நான்கில் மூன்று பகுதி, தமிழர் கலாச்சாரந்தான்" என்று வங்காளப் பேராசிரியரான டாக்டர் சுகுமார் சட்டர்ஜி குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார். அவர், பாங்காங் நகரில் உள்ள பாதிரியார்கள் இன்றும், மன்னர்குல நிர்மாண விழாக்களின் போது தமிழ் மொழியில் உள்ள பாடல்களை ஒப்புவிப்பதாகக் கூறியுள்ளார். உலகத்திலுள்ள பண்பாடுகள் பலவற்றிலும் தமிழ்ப் பண்பாடு எவ்வளவு ஊடுருவி இருக்கிறது என்பது பல எடுத்துக்காட்டுகளால் இது நாளில் விளக்கப்பட்டு வருகிறது. ஐ. நாவின் பண்பாட்டு நிறுவனம் தமிழ்ப் பண்பாட்டை அதாவது திராவிடப் பண்பாட்டை ஆராயும் பணியினை மேற்கொள்ள ஆவன செய்யவேண்டும். தமிழ்ப் பெருந்தலைவர்கள் அதற்கான நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டும்.

° ° °

உண்மையான கூற்று

காங்கிரசைத் தூய்மைப்படுத்தும் வழிவகைகளைக் குறிக்கும் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்ட பண்டித நே "காங்கிரசில் இருக்கும் ஏராளமான ஊழல்களை பார்த்துக் கண்ணை மூடிக்கொண்டு சும்மா இருக்கமுடியாது. அவற்றை மூடிவைக்கலாகாது. காங்கிரசி உள்ள மிக உயர்ந்தவர் சிலர்கூடக் குற்றமிழைத்துள்ளனர்" என்று தெளிவுபடுத்தியுள்ளார். நே உண்மையான கூற்றைத்தான் கூறியுள்ளா ஆனால் நீண்டநாட்களுக்கு முன்பு எடுக் வேண்டிய நடவடிக்கைகளைக் காலங்கடந் எடுக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கு வ துள்ளார். ஐந்தில் செய்யவேண்டியதை ஐ பதில் செய்ய முனைகிறார். ஊழல் செய்யாதவ களின் எண்ணிக்கை அதிகமாகவும், ஊழ செய்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவு இருந்தால், காங்கிரசைத் தூய்மைப்படுத்து தில் பொருளிருக்கும். ஆனால் உள்ள நிலை அதற்கு நேர் மாறாக இருப்பதால், காங்கி ரசைக் கலைப்பதுதான் ஏற்றவழியேயல்லாமல் அதனைத் தூய்மைப்படுத்த முயல்வது அவ் ளவு பலன் தராது என்பதைத்தான் பண்டி நேருவுக்கு அறிவுறுத்தவேண்டி யிரு கிறது.

"பணமூட்டைகளிடம் தொகை வசூல் செய்தா அவர்கள் குறுக்கீடு இல்லாமலா போகும்?" என் காங்கிரச்காரர்களைப் பார்த்துப் பண்டித நே அதே பேச்சில் கேட்டுள்ளார். இந்தக் குற்ற திற்குப் பண்டித நேருவே பலதடவை உ ளாகியிருக்கும்போது, மற்றவர்களைப் பற்றி சொல்லவாவேண்டும்? இன்று காங்கிரசு கொள்கை பற்றிய குணத்தினால் அல்ல பணம் பற்றிய பலத்தினால்தான் வாழ்கிறது என்பது தெளிவாகிவிட்டபிறகு, காங்கிரசை கட்டிக்காக்கும் கனதனவான்கள் பண்டி நேருவின் பேச்சையா கேட்கப்போகிறார்கள் நேருவின் பெயர் அவர்களுக்கு நன்கு பயன் படுவதால், அவர்கள் நேருவைத்தான் வி வார்களா அல்லது காங்கிரசைத்தான் கலைக் முற்படுவார்களா? இத்தகையவர்களிடமிருந் நேருதான் எப்படித் தப்புவார் அல்லது காங்கிரசைத்தான் எப்படிக் காப்பாற்றுவார் நாட்டுக்குழைத்து, மனைவிமக்கள் வீடுவாச களைப் பறிகொடுத்து வீரவாழ்வு நடத்தி பலர் வளர்த்த காங்கிரச், இப்பொழுது கள் ளச் சந்தைக்காரர்களாலும், ஆலை முதலாளி களாலும், நிலப்பிரபுக்களாலும் வணிக கோமான்களாலும், பண மூட்டைகளாலு வளர்க்கப்படவேண்டிய நிலைக்கு வந்துவி டதே! கால் புண் புரையோடிவிட்ட பிறகு காலையே வெட்டவேண்டியதைத் தவிர புண்ணை ஆற்றும் வழி எங்கிருந்து கிடைக்கப் போகிறது?

அண்ட சாகரம்



இரா.செழியன்

(15)

காசிபருக்கு வச்சிராங்கன் என்ற ஒரு மகன் இருந்தான். அவன் தவஞ் செய்ய முயலும் பொழுது இந்திரன் செய்யும் தொந்தரவுகள் பொறுக்கமுடியாதனவாக இருந்தன. காசிபருக்கு அதிதியிடம் பிறந்தவன் இந்திரன், காசிபருக்கு திதி என்ற மற்றொரு மனைவியிடம் பிறந்தவன் வச்சிராங்கன். எனவே வச்சிராங்கன் இந்திரனுக்குத் தம்பி முறையாக வேண்டும். இருந்தாலும் வச்சிராங்கன் தவம் செய்து பலம் அடைந்துவிடக்கூடா தென்பதற்காக அவன் செய்யும் தவத்துக்கு இடையூறுகள் செய்துவந்தான். எனவே வரம் பெறுவதற்காகத் தவம் செய்வதற்குமுன், தவம் செய்வதற்குத் தகுந்த சூழ்நிலையைப் பெறுவதற்காகவே வச்சிராங்கன் தவம் செய்யவேண்டியிருந்தது.

வச்சிராங்கன் செய்த தவத்தின் முதற்கட்டத்தின் முடிவில் பிரமதேவன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். "இடையூறின்றித் தவம் செய்வதற்கான வசதியைத் தரவேண்டும்" என்று வச்சிராங்கன் கேட்டான். பிரமன் வச்சிராங்கி என்ற குமரியை உண்டாக்கி—பிரமன் சிருஷ்டிகர்த்தா அல்லவா, அதனால் எத்தகைய கஷ்டமுமின்றி ஒரு குமரியை உடனே தரமுடிந்தது—"இவள் உன் தவத்தைப் பாதுகாத்து வருவாள்" என்று அவளை வச்சிராங்கனிடம் ஒப்படைத்து மறைந்தார்.

தவம் செய்பவர், தனித்து வாழ்பவர் அவரிடம் ஒரு அழகிய பெண்ணை ஒப்படைத்துச் சென்றால், நிலைமை எவ்வாறாக இருக்கும்? கட்டளை, அச்சம், பேச்சு, கூச்சம், பணிவிடை, குழைவு,—பின் தவசியின் தர்மபத்தினியாக ஆனாள். பிரமாவும் அந்த எண்ணத்தில்தான் வச்சிராங்கனுக்கேற்ற வச்சிராங்கியைத் தந்துவிட்டுப்போனார்போலும். வச்சிராங்கன் தவம் செய்வதைவிட்டு, வச்சிராங்கியுடன் காட்டில் மலர் கொய்து, நீர்விளையாடி, வருவதைப் பார்த்து, இனி வச்சிராங்கன் தானெடுத்தத் தவத்தை மறந்துவிடுவான் என்று இந்திரன் நிம்மதி அடைந்தான்.

இந்திரனின் நிம்மதி வெகுநாளைக்கு நீடிக்கவில்லை. சிறிது காலத்துக்குள் வச்சிராங்கன் மீண்டும் தவம் செய்ய ஆரம்பித்தான். அவனுடைய தவத்துக்கு எத்தகைய இடையூறும் வராமல், ஆச்சிரமத்தின் முன்னால் வச்சிராங்கி அமர்ந்திருந்தாள்.

வச்சிராங்கன் எடுத்துக்கொண்ட தவம் மிகக் கடினமானது. 28000 ஆண்டுகள் அவன் தவம் செய்தான் என்று புராணங்கள் கூறுகிறது. இவ்வளவு நீண்டகாலத் தவத்தை அவன் மேற்கொண்டதும், அவனுடைய மனைவியாக இருந்த வச்சிராங்கி ஆச்சிரமத்தின் முன்னால் அமர்ந்து, அவளும் தவம் செய்யத்தொடங்கினாள். வச்சிராங்கன் தவத்தைக் கலைத்துவிடவேண்டுமென்று இந்திரன் முதலில் முயன்றான். பின் வச்சிராங்கி வந்ததும், வச்சிராங்கனின் தவம் அழிந்துவிட்டது என்று நம்பினான். ஆனால் இப்பொழுது வச்சிராங்கன் மட்டுமல்ல, வச்சிராங்கியும் தவம் செய்ய ஆரம்பித்துவிட்டாள்! ஒரு ஆபத்து என்று நினைத்ததுபோய், இரண்டு ஆபத்துகள் இந்திரனைப் பயமுறுத்தின. இவர்களது தவத்தை எப்படியாவது கலைத்துவிடவேண்டுமென்று இந்திரன் திட்டமிட்டான்.

இந்திரன் முதலில் மேகக்கூட்டங்களை ஏவினான். வச்சிராங்கன், வச்சிராங்கி தவம் செய்த காட்டில் கடுமழை பெய்தது. வெள்ளம் பெருக்கெடுத்தோடியது, பர்ணசாலை தண்ணீரால் சூழப்பட்டது. ஆனாலும் வச்சிராங்கனும் வச்சிராங்கியும் தமது தவத்தைக் கைவிடவில்லை.

இந்திரன் இடியையும் மின்னலையும் அனுப்பினன்- காட்டிலிருந்த நெடுமரங்கள்மீது இடியால் தாக்கப்பட்டு, பற்றி எறிந்தன. பர்ணசாலையைச் சூழ்ந்து, நெருப்பு சுவாலை வீசியது. கடும் மழை, பின் அதற்கு நேர்மாருகக் காட்டுத் தீ! வச்சிராங்கனின் தவம் தடைப்படவில்லை,

புயல் வீசியது, குளிர் அடித்தது, பனி பெய்தது! வச்சிராங்கன், வச்சிராங்கி இருவரும் செய்யும் தவம் எந்தவகையிலும் குறையாது வளர்ந்தபடி இருந்தது. இயற்கையின் கொந்தளிப்பை வீசுவதால், அவர்களுடைய தவம் தடைப்படும் என்று இந்திரன் செய்தவை பயனற்றுப்போயின.

கடைசியாக இந்திரன் புறப்பட்டு, அவர்கள் தவஞ்செய்யும் காட்டுக்கு வந்தான். பர்ணசாலையில் உட்பகுதியில் வச்சிராங்கன் அமர்ந்து தவக்கோலத்தில் இருந்தான். வெளிப்பகுதியில் வச்சிராங்கி தவஞ்செய்துகொண்டிருந்தாள். முதலில் வச்சிராங்கியின் தவத்தைக் கெடுப்பதென இந்திரன் திட்டமிட்டான். இந்திரன் தன் உருவத்தைக் குரங்கு உருவமாக மாற்றிக்கொண்டு பர்ணசாலையில் அங்குமிங்கும் தாவி, இருந்த பொருள்களையெல்லாம் வாரியிறைத்தான். பர்ணசாலை அலங்கோலமாயிற்று, பண்டங்கள் பாழடைந்தன. பானை, கமண்டலங்கள் உடைந்துகிடந்தன. வச்சிராங்கி தியானத்திலிருந்து கண்விழித்ததும், இருக்கும் அலங்கோலத்தைப் பார்த்து, ஆச்சரியமடைந்தவளாய் சுற்றிலும் பார்த்தாள், தூரத்தில் தாவிக்கொண்டிருக்கும் குரங்கு ஒன்றுதான் காணப்பட்டது. எல்லாம் குரங்கின் வேலையென்று தெரிந்துகொண்டாள். கூட்டிப் பெருக்கி, பர்ணசாலையை ஒழுங்குபடுத்திப், பதிக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டுக், கந்த மூலாதிகளை அருந்தி பழையபடி தியானத்தில் அமர்ந்தாள். குரங்கு உருவத்தில் இந்திரன் செய்த இடையூறுகள் பயனற்றுப்போயின.

மறுநாள் இந்திரன் பெரிய பாம்பு உருவத்தையடைந்து, தவம் செய்துகொண்டிருக்கும் வச்சிராங்கியின் கால்களைப் பின்னிக்கொண்டான். தியானம் கலைந்து, கால்களில் நழுவிடும் பாம்பைக் கண்டு பதறி, அதை எடுத்துத் தூரப்போட்டுவிட்டு, வேறொரு இடத்துக்குப் போய் தனது தவத்தை மேற்கொண்டாள். பாம்பு மறுபடியும் அந்த இடத்துக்குப்போய் கால்களைச் சுற்றிக்கொண்டது. பாம்பை உதறிக்கொண்டு. வச்சிராங்கி பிறி... தோரிடம் சென்ருள். பாம்பு அங்கேயு... தொடர்ந்தது. இவ்வாறு ஒவ்வொரு தடவை... யும் பாம்பு கால்களைச் சுற்றும்பொழுது, வச்சி... ராங்கி இடத்தை மாற்றிக்கொண்டு தவத்தை மேற்கொண்டாள்.

பாம்பைப்போல் சென்று வச்சிராங்கியின் தவத்தைக் கலைக்கமுடியாமல்போக, இந்திரன் நரி உருவத்தை எடுத்துக்கொண்டு பர்ண... சாலையில் நுழைந்து, அங்கு இறைச்சி, ரத்த... இவைகளைச் சிதறடித்தான்; கடைசியாக பர்ணசாலையின் யாக மேடையிலும் மலம் மூத்திரம் இவைகளைப் பெய்தும், அவற்றின் தூய்மையைக் கெடுத்துவிட்டான். வச்சிராங்கி கண்விழித்தபொழுது, ஆசிரமம் துர்நாற்ற... வீசுவதாய், இறைச்சி, இரத்தம் சிந்தப்பட்... தாய்த் தூய்மை கெட்டுக் கிடந்தது. தனது கணவர் வச்சிராங்கன் தவம் கலைந்து எழு... தற்குமுன் மிகவும் பாடுபட்டு, அசுத்தங்களை அப்புறப்படுத்திப் பர்ணசாலையைத் தூய்மை... படுத்தினுள்.

வச்சிராங்கன், வச்சிராங்கி இவர்களின் தவத்தைக்கெடுக்க இந்திரன் எல்லாவிதமான உபாயங்களையும் கையாண்டான். நாயாய்ப் பேயாய், நரியாய்ப், பரியாய்க் காட்டு மிரு... கங்களைப்போல் உருவெடுத்து, ஆசிரமத்தை அசுத்தப்படுத்தியும், வச்சிராங்கியின் தவ... துக்கு இடையூறுகள் தந்தும் வந்தான். வச்... சிராங்கன் செய்யும் தவத்துக்கு இடையூ... எதுவும் வரக்கூடாது என்பதற்காக, வச்... ராங்கி அந்த இடையூறுகளையெல்லாம் பொறுத்துவந்தாள். ஒருநாள், இருநாள் அல்ல, ஓராண்டு, ஈராண்டுகாலமல்ல, இருப... தெட்டாயிரம் (28000) ஆண்டுகள் வச்சிரா... கன் தவம் செய்தான். இந்திரன் தொந்தர... கள் கொடுத்துக்கொண்டே வந்தான். வச்... ராங்கி அவற்றைப் பொறுத்துக்கொண்டே வந்தாள்.

வச்சிராங்கனின் தவம் முடியும் தருவா... நெருங்க, நெருங்க, இந்திரன் தரும் தொந்தர... கள் பெருகிக்கொண்டு போயின. வச்சிராங்... யின் பொறுமையும் எல்லை கடப்பதாயிற்று... தாங்கள் செய்யும் தவத்திற்கு அந்த மலை... லிருக்கும் மிருகங்கள் வந்து இடையூறுகள் செய்வதால், அந்த மலைகளுக்கு அரசனை... பர்வதராஜன் என்பவனைச் சபிக்கப்போனாள். பர்வதராஜன் அவள்முன்வந்து “ உங்களுக்... வந்த இடையூறுகள் இந்த மலையிலுள்ள மிரு... கங்களால் வந்தவையல்ல. உங்கள் தவத்தை

கெடுக்க இந்திரனே இந்த உருவங்களைத் தாங்கி இடையூறுகள் தருகிறான்!" என்று உண்மை நிலையைச் சொன்னான். தங்களது தவத்தைக் கலைக்க முயன்ற இந்திரனுக்குத் தக்க தண்டனைகள் தரவேண்டுமென வச்சிராங்கி பர்ணசாலைக்கு வந்தாள்.

இதற்கு இடையில், வச்சிராங்கன் மேற்கொண்ட தவத்தின் காலம்—28000 ஆண்டுகளும் முடிந்துவிட்டன. பிரமதேவன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்!" என்று கேட்டார். வச்சிராங்கன் "எனக்கு அழியா உலகமும், தவத்தில் ஆர்வமும் தந்தருள வேண்டும்!" என்றான். பிரமனும் அந்த வரத்தைத் தந்தான். வச்சிராங்கன் மேலுலகம் சென்றான்.

வச்சிராங்கி வந்தபொழுது பர்ணசாலையில் வச்சிராங்கனைக் காணவில்லை. எங்கும் தேடினாள், அருவிக்கு ஓடினாள், மலைமீது நின்று கூவினாள். தனது கணவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பின் ஆசிரமத்திற்கு வந்து அழுது புலம்பிக்கொண்டிருந்தாள்.

வச்சிராங்கியின் அழுகுரல் வச்சிராங்கனுக்குக் கேட்டது. உடனே அவள்மீது இரக்கங் கொண்டு, வச்சிராங்கன் அவன் முன் தோன்றினான். வச்சிராங்கி தன் கணவனைக் கண்டதும் அழுவது நீங்கி, தனக்குற்ற இடையூறுகளைச் சொன்னாள். "இந்திரனைத் தோற்கடிக்க, ஒரு மகன் எனக்குப் பிறக்கவேண்டும்!' என்று வச்சிராங்கி தன் கணவனை வேண்டிக்கொண்டாள். வச்சிராங்கனும் அவ்வாறே அருளிச்செய்தான். அதன்படி வச்சிராங்கிக்குத் தாரகன் என்ற மகன் பிறந்து அவன் இந்திரனை வென்று, கடைசியாகச் சுப்பிரமணியக் கடவுளால் கொல்லப்பட்டான் என்று புராணம் மேற்கொண்டு கூறுகிறது. இந்தக் கதையில், தனக்குப் பிடிக்காதவர்கள்—அவர்கள் எந்தவகையிலும் பிறர்க்கு தீங்கு செய்யாதவர்கள், அவர்கள் செய்த தவத்தைக் கெடுக்க இந்திரன் முயன்றிருக்கிறான் என்பது நன்கு தெரிகிறது.

முனிவர்கள் செய்யும் தவங்களையும், அரசர்கள் நடத்தும் யாகங்களையும் கலைப்பதில் இந்திரன் மிகவும் பாடுபட்டிருக்கிறான். கொலை, கொள்ளை, களவு, காமம் எதையும் தயங்காது புரிந்து, பிறரின் தவத்தை அவன் கெடுத்துவிடுவது வழக்கம். புராணங்களில் மிகக் கொடுமையாகச் சித்தரிக்கப்படுகிற அசுரர்கள் கூட, இந்திரனின் செயல்களுக்குப் பின்னடைந்துபோகவேண்டும். அந்த அளவு இந்திரன் இழிவும் பழியும் வரக்கூடிய மாபாதகங்களுக்கும் துணிந்து பிறர் யாகங்களைக் கெடுத்திருக்கிறான்.

ஒருசமயம் அம்பரிஷன் என்ற அரசன் பெரிய யாகமொன்று நடத்தினான். ஆரிய வேதங்களின் முறைப்படி நடத்தப்படும் யாகங்களில் யாகபசு என்று ஒன்றிருக்கும். அதை நன்கு குளிப்பாட்டி, அலங்கரித்து யாகப் பந்தலில் ஒரு கம்பத்தில் கட்டியிருப்பார்கள். யாகத்தின் முடிவில், தலைமைப் புரோகிதன் உத்தரவிட, உதவிப் புரோகிதர்கள் பசுவை அவிழ்த்து' முகம் தெற்குத்திக்கிலும் கால்கள் வடக்குத் திக்கிலும் இருக்கும்படி படுக்க வைத்து, ஒரு புரோகிதர் வேத மந்திரங்களைச் சொல்லி, ஒரு கனமான தடியை எடுத்துப் பசுவின் கழுத்தில் பலமாக அடித்துக் கொலை செய்வார். பசு இறந்ததும், ஒரு மரப்பலகையில் பசுவின் பிணத்தைப் போட்டு, எல்லாப் புரோகிதர்களும் சூழ்ந்து உட்கார்ந்து, தோலை உரித்துச், சதையை அரிந்தெடுத்துச், சிறிது நெருப்பிலிட்டு, மீதியுள்ளதைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்வார்கள். பசுவை அறுக்கும்போதுகூட, புரோகிதர்கள் அளவெடுத்து, அறுக்கவேண்டுமாம். கொலை செய்யப்பட்ட பசுவின் மார்பிலிருந்து பருந்தின் வடிவத்தில் சதையை அறுப்பார்கள், பின் கால்களை இரண்டு துண்டுகளாக அறுப்பார்கள்; முன் கால்களையும் இரண்டு துண்டுகளாக ஆக்குவார்கள். தோலிலிருந்து ஆமை வடிவத்தைப்போல வட்டமாக துண்டுகள் எடுப்பார்கள். இன்னும் இவற்றைப்போல இருபத்தாறு துண்டுகளை அறுத்தெடுத்துக் கொள்வார்கள். ஆரிய வேதங்களில் சொல்லப்பட்ட யாகங்களில் பசுமாடுவையன்றி, கன்றுக்குட்டி, காட்டுப்பசு, குதிரை, ஆடு, நாய், வெள்ளைக் கொக்கு, கருந்தவளை, பல மிருகங்கள், பறவைகள் கொல்லப்பட்டு, தீயில் காட்டி பதப்படுத்தப்படும். முக்கிய தேவர்களுக்கும், கடவுள்களுக்கும் அறுக்கப்பட்ட மாமிசத் துண்டுகளில் சில அவிர்ப்பாகமாக வழங்கப்படும். மிகுதியிருக்கும் மாமிசத் துண்டுகளை யாகப் புரோகிதர்களே பங்குபோட்டுக்கொள்வார்கள். இத்தகைய பசுவைக் கொல்லும் யாகங்களைச் செய்வதால், அரசனுக்கும் தேசத்துக்கும் நல்லது என்று வேதங்கள் வலியுறுத்திக் கூறியுள்ளன. அம்பரிஷன் என்ற அரசனும் அத்தகைய யாகத்தைச் செய்ய முற்பட்டான் ஆனால் அம்பரிஷன் செய்யும் யாகம் இந்திரனுக்குப் பிடிக்கவில்லை.

அம்பரிஷன் யாகம் நடந்துகொண்டிருந்தது. யாகக்கொட்டிலின் பக்கத்தில் யாகப்பசு கட்

டப்பட்டிருந்தது. யாகம் செய்பவர்களின் கவனம் சற்றுக் குறைவாயிருந்தபொழுது, பக்கத்தில் மறைந்திருந்து, யாகப்பசுவை ஓட்டிக்கொண்டு இந்திரன் போய்விட்டான். யாகம் முடியும்பொழுது, கொலை செய்யப்படுவதற்கு யாகப்பசுவைப் பார்த்தால் காணோம்! திருட்டுப்போய்விட்டது!

அரசனும் பிரதானியர்களும் எங்கும் தேடினார்கள். பசுவைக் காணவில்லை. கத்தியும் தடியுமாக இருந்த யாகப் புரோகிதர்களோ துடிக்கிறார்கள், மாமிசத்தைப் பங்குபோடுவதற்கு. யாகம் சற்று நிறுத்தப்பட்டது. அந்தப் பசு வந்தால்தான் யாகம் நிறைவேறும், இல்லையானால் யாகம் நடத்தியதற்குப் பலன் சிறிதுகூடக் கிடைக்காமற்போய்விடும் என்று தலைமைப் புரோகிதர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

யாகப்பசு காணாமற்போனதும், அதேபோல் கொழுத்த, பெரிய பசுவைத் தேடினார்கள். கிடைக்கவில்லையாம்.

"வேதப் புரோகிதரே! எப்படியாவது யாகத்தை நிறைவேற்ற வேண்டும்!" என்று அம்பரிஷன் கேட்டுக்கொண்டான்.

"அரசனே! யாகப்பசு இல்லாமல் எப்படி யாகத்தை முடிக்கமுடியும்! தேவர்களுக்கு அவிர்ப்பாகம் எப்படித் தருவது? புரோகிதர்களுக்கு என்ன யாகதானம் தருவது? முன்னிருந்தது மாதிரி ஒரு பசுவைக்கொண்டுவா! யாகத்தை முடித்துவிடலாம்" என்று யாகப் புரோகிதர் கட்டளையிட்டார்.

"கிடைக்கவில்லை; பசுவிற்குப் பதிலாக வேறு மிருகங்கள்.........?' அரசன் கேட்டான்.

"பசுவைப்போன்ற புனிதமான மிருகம் வேறு எதுவும் கிடையாது. யாகத்திற்கு மிகச் சிறந்தது அதுதான்! பசுவிற்குப் பதிலாக வேண்டுமென்றால்...ஆனால் உம்மால் அது முடியுமா?"

"பசுவிற்குப் பதிலாக வேறு ஏதாவது வைத்து யாகம் செய்யமுடியுமா? உடனே சொல்லுங்கள். கொண்டுவரச் செய்கிறேன்! பசுவிற்குப் பதிலாக என்ன வேண்டும்?"

"ஒரு மனிதன்!"

"என்ன மனிதனா? யாகப் பசுவிற்குப் ப லாக மனிதனா?"

"ஆமாம். பசு இல்லாவிட்டால், மனிதனை பசுவாகப் பாவித்து, யாகம் செய்யலாம். அ னுக்கு நரப்பசு என்று பெயர், வேதங்க இந்த உபாயத்தைச் சொல்லுகின்றன."

நரப்பசு (மனிதனாகிய பசு) ஒன்றைத் தே அம்பரிஷன் அலைந்தான். யாகம் முடிவி யாகப்பசு வெட்டப்பட்டு, துண்டுகளாக்க பட்டு, நெருப்பிலிட்டு பதனு செய்யப்பட் உண்ணப்படும். அதைப்போல, யாகப்பசுவா வருகிற மனிதனும் வெட்டப்பட்டு, துண் களாக்கப்பட்டு, நெருப்பிலிடப்படவேண் வரும். அதனால் யார்தான் தம்மை நரப்ப வாக ஒப்படைக்க முன்வருவார்கள்.

நரப்பசுவுக்கு ஏராளமாக பணம் கொடுக் அம்பரிஷன் தயாராக இருந்தான். கடைசியா இருசிகன் என்ற பிராமணன் முன்வந்தா அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்க முதலாவது மூன்றாவது பிள்ளையை விட் இரண்டாவது பிள்ளையை அம்பரிஷனிட தந்துவிட்டு, ஏராளமான பணத்தை விலையா வாங்கிக்கொண்டான்.

அந்த இரண்டாவது மகன் சுநச்சேப என்ற பெயருடையான், சிறுவன், பால்ம மாறாதவன். பணத்தாசை பிடித்த தந்தையா விலைக்கு விற்கப்பட்டபின், அரசன் அம்பரி னுடன் சென்றான். அங்கு அவனுக்கு நீரா டுதல் செய்து, மாட்டுக்கு செய்யவேண்டி மரியாதைகளையும், அலங்காரங்களையு செய்து, யாகப் பந்தலுக்கு அழைத்து கொண்டுபோனார்கள். யாகப் பந்தலையு அங்கு தடி, அரிவாள், இரத்தத்தைப் பிடி கப் பாத்திரங்கள், இவைகளையெல்லாம் பார் ததும், சிறுவனான சுநச்சேபன் பயந்துபோ அழ ஆரம்பித்தான். அப்பொழுது அங் வந்த விசுவாமித்திரர் சிறுவனைப்பார்த் இரக்கங்கொண்டு, அவனுக்கு 'மிருத்யு ஜய' என்ற மந்திரத்தை உபதேசித்தாரா யாகத்தின்போது கம்பத்தில் கட்டப்பட் சிறுவன் அந்த மந்திரத்தை ஜெபித்து கொண்டேயிருந்தானாம். கடைசியாகச் சி வனைப் பசுவாகப் பாவித்துக் கொல்லப்ப பொழுது, மந்திரபலத்தால் தேவர்க தோன்றி "எங்களுக்கு அவிர்ப்பாகம் வே டாம்" என்று சொல்லிவிட்டார்களாம்.

(தொடரு

டர்கதை

னி வெளியில்

இரா. செழியன்

(1-1-55-ந் தேதி இதழின் தொடர்ச்சி)

முதற் சிகிச்சை தொடர்ந்து நடைபெற்றது. ர்ச்சையாகிக்கிடந்த சகுந்தலா மெதுவாகக் ண்விழித்தாள். அர்த்தமற்ற பார்வையுடன் ற்றிலும் பார்த்துவிட்டுத் திடீரென்று ழுந்து உட்கார்ந்தாள்.

“எங்கிருக்கிறேன்?”

“சகுந்தலா, பேசாமல் படுத்துக்கொள்!” ன்று டாக்டர் தங்கம் அவளை மீண்டும் டுக்கவைத்தாள். சகுந்தலாவின் ஆடைகள் னைந்திருந்தன. நர்சும், வேலை செய்யும் ஆயா ம் சகுந்தலா படுத்திருந்த கட்டிலைப் பக்கத்து றைக்கு இழுத்துச் சென்றார்கள், உடை ற்றிவிட.

டாக்டர் முத்துசாமி குழந்தையின் பக்கத் ல் நின்றுகொண்டிருந்தார். “தண்ணீரில் விழுந்து இறந்துவிட்டது!”

தங்கம் இறந்துகிடக்கும் குழந்தையைப் ர்த்தாள், அது இறந்துவிட்டதென்று சால்வதை நம்பமுடியாது, அயர்ந்து தூங்கு தைப்போலிருந்தது. தங்கம் அதன் கையைப் பிடித்துப்பார்த்தாள். பனிக்கட்டி யைப் பிடிப்பதுபோல விறைத்துக் கிடந்தது.

“எங்கே கண்டுபிடித்தார்களாம்?” என்று கம் கேட்டாள்.

டாக்டர் முத்துசாமி தனது கையிலிருக்கும் டைப் பார்த்தபடி, “கோட்டைக்கு எதிரி ள்ள கடற்கரையில்! ஒருமணி நேரத்துக்கு னதாக, சரியாக பன்னிரண்டு பத்துக்கு!”

“இந்த நடுப்பகலில், கடும் வெய்யலில் ந்தலா கடற்கரைப் பக்கம் ஏன் போனாள்? த விபத்து எப்படி ஏற்பட்டதாம்?”

“சரியாகத் தெரியவில்லை, கடற்கரையில் றுகொண்டிருந்த மீன்பிடிப்பவர்கள் அலையில் இவள் தத்தளிப்பதைப் பார்த்து, தூக்கி வந்து கரையில் போட்டிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் ஆஸ்பத்திரிக்கு போன் செய்து இவளை அழைத்துவந்தார்கள்.”

“இந்தப் பெண் யாரென்று தெரியுமா?”

“முதலில் எனக்குத் தெரியாது, நர்ஸ் சொன்னாள். உடனே உங்களைக் கூப்பிடச் சொன்னேன்! குழந்தையை மரணப்பரிசோதனை அறைக்கு அனுப்பவேண்டும்.”

இறந்த குழந்தையைத் துணியால் மூடி வேலையாள் தூக்கிப்போனான்.

குழந்தையை எடுத்துச் சென்றதும் தங்கம் சகுந்தலா படுத்திருக்கும் அறைக்கு வந்தாள். அவசர கேஸ்கள் வந்தால், அந்த அறையில் போட்டுவைப்பது வழக்கம்.

சகுந்தலா மேலே பார்த்தவண்ணம் படுத்திருந்தாள், தங்கம் வருவதைப் பார்த்ததும் வேறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள். தங்கம் ஒன்றும் பேசாமல் படுக்கையினருகில் நின்றுகொண்டிருந்தாள்.

“சகுந்தலா!” தங்கம் மெதுவாகக் கூப்பிட்டாள்,

சகுந்தலா திரும்பிப் பார்க்கவில்லை.

திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவளைப்போல, சகுந்தலா படுக்கையை விட்டு எழுந்து வெளியே போகப் புறப்பட்டாள்.

“சகுந்தலா! எங்குபோகிறாய்?” என்று தங்கம் அவள் பக்கம் வந்தாள்.

“எங்கு போனால் என்ன? நான் எங்கேயாவது போவேன்!” என்று சகுந்தலா கோபத்துடன் சொன்னாள். தங்கம் திகைத்துப்போய் உட்கார்ந்தாள். அந்தக் கடுஞ்

சொற்களை அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் எங்குபோனால்தான் என்ன என்று விட்டுவிட வும் மனம் வரவில்லை.

"இல்லை, சகுந்தலா! இப்பொழுதுதானே மூர்ச்சை தெளிந்தது!"

"மறுபடியும் மூர்ச்சையாகவேண்டுமா? இங்கிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. நான் போகிறேன். குழந்தை எங்கே?" என்று சுற்றிலும் பார்த்தாள்.

"குழந்தை இறந்துவிட்டது!"
தங்கம் எதிர்பார்த்தபடி, சகுந்தலாவிடம் அதிர்ச்சியோ, திகைப்போ காணப்படவில்லை. சகுந்தலா சிறிதுநேரம் பேசாமல் நின்றாள்.

"இறந்த குழந்தையை 'மார்ச்சுவரி' அறையில் போட்டிருக்கிறது. பார்க்கவேண்டுமா?" என்று பக்கத்தில் நின்றுகொண்டிருந்த நர்ஸ் கேட்டாள்.

சகுந்தலா மறுபடியும் சீற்றத்துடன் பார்த்தாள். "நான் ஏன் பார்க்கவேண்டும்? நான் போகிறேன், போகிறேன். என்னை விடுங்கள்!" என்று அவளைக் கட்டுப்படுத்துபவர்கள் எவர்களிடமிருந்தோ தப்பித்துக்கொண்டு போவதைப்போல, அந்த இடத்தைவிட்டு ஓடினாள், அவள் அறையைவிட்டு வெளிவரும்பொழுது போலீஸ்காரர்கள் இருவர் வழிமறைத்து நின்றார்கள்.

சகுந்தலா நின்று அவர்களை உற்றுப் பார்த்தாள். பின் பயத்துடன் பின்வாங்கி, தங்கத்திடம் ஓடிவந்தாள். "டாக்டர்! அந்தப் போலீஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள்!"

தங்கம் முன்வந்தாள், "ஏன்? எதற்காக வந்தீர்கள்?"

"நாங்கள்தான் மூர்ச்சையாகிக் கிடந்த அந்தப் பெண்ணை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தோம். இப்பொழுது அழைத்துப்போக வேண்டும்!"

"எங்கே?"

"போலீஸ் ஸ்டேஷனுக்கு!"

"போலீஸ் ஸ்டேஷனுக்கா? ஏன்? அவள் என்ன குற்றம் செய்தாள்?"

"தற்கொலை புரிந்துகொள்ள முயன்றது!"

"தற்கொலையா? கிடையவே கிடையாது! ஏதோ தவறி உண்டான விபத்து" என்று தங்கம் கூறினாள். சகுந்தலாவின் பக்கம் திரும்பி "அப்படி ஏதாவது நடந்ததா? நீ எதற்காகக் கடற்கரைப் பக்கம் போனாய்?" என்று ஆரம்பித்தாள்.

சகுந்தலா இடைமறித்து, "அதெல்லா ஒன்றும் வேண்டாம். நான் போலீஸ் ஸ்டே ஷன் போகிறேன்" என்று வெளியே வந்தா

வெளியில் ஒரு போலீஸ்வானும் அதில் ஒ பெண்ணும் காத்திருந்தார்கள். சகுந்தல அதில் ஏறிக்கொண்டாள். வான் நகர்ந்தத சகுந்தலா திரும்பிக்கூடப் பார்க்கவில் வான் கட்டிடத்தைக் கடந்து, மறைந்து விட்டது.

தங்கம் எல்லாவற்றையும் பார்த்தப நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு ஒன்று புரியவில்லை. சகுந்தலா மூர்ச்சையாகிக்கி ததுபின் வெளியேபோக அவள் கூச்ச போட்டது—பின் போலீஸ்காரர்கள் அழை துச்சென்றது—ஒன்றுக்கொன்று தொட பின்றி நடைபெற்றுவிட்டன. தற்கொலை புரி முயன்றதாகக் குற்றம்—சகுந்தலா தற்கொ புரிய ஏன் முயன்றாள்? எந்தக் காரணமு இருப்பதாகத் தங்கத்தால் யோசிக்க முடி வில்லை. கடற்கரைப் பக்கம் போனவ தவறி விழுந்திருக்கவேண்டும். அதி குழந்தை இறந்திருக்கும். அதை வைத்து கொண்டு, போலிஸ்காரர்கள் வேறு குற்ற தைச்சாட்டி வெறும் வழக்குத் தொடர்கிறு கள்.

என்ன செய்வது என்று புரியவில் சகுந்தலா போலிஸ் ஸ்டேஷனில் இப்பொழு இருக்கிறாள்—அந்த எண்ணம் தங்கத்தி இதயத்தில் முள்கொண்டு குத்துவதுபோ லிருந்தது, அவளுக்கு என்ன நேர்ந்தது எப்படி தெரிந்துகொள்ளலாம்? தங்க 'போனை' எடுத்து எண்களைச் சுழற்றினாள்.

"யாரது? மாணிக்கமா பேசுகிறது...ஐய இருக்காங்களா...வேலூருக்குப் போயிரு காங்களா...ஆமாம் மறந்துவிட்டேன்!"

தங்கம் தன் கணவன் கமலநாதனுடன் பே னால், ஏதாவது தெரிந்துகொள்ளலாம் என் நினைத்தாள். ஆனால் கமலநாதன் அன் காலை புறப்பட்டு வேலூர் சென்றிருந்தா அன்றிரவுதான் திரும்புவான். அதை மறந் விட்டு, தங்கம் அவனுக்குப் 'போன்' செ தாள்.

"என்ன பலமாக யோசித்துக்கொண்டிரு கிறாய்?" என்று டாக்டர் சஞ்சீவி கு கொடுத்தபொழுதுதான், தங்கம் விழி படைந்து பார்த்தாள்.

“சகுந்தலாவைப் போலீசார் அழைத்துக் கொண்டுபோயிருக்கிறார்கள். என்ன செய்ய லாம்?”

“சகுந்தலாவா? போலீசா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!” என்றார் டாக்டர் சஞ்சீவி.

ஒருமணி நேரங்கழித்து, டாக்டர் சஞ்சீவி யும், தங்கமும் மாகாணப் பிரதம மாஜிஸ்ட்ரேட் முன் நின்று, ஜாமின் பத்திரத்தில் கையெழுத் திட்டு, சகுந்தலாவை அழைத்துவந்தார்கள்.

* * *

மறுநாள் காலை கமலநாதன் அறைக்குள் தங்கம் வந்தாள்.

“இன்னும் நீ கிளம்பவில்லையா?” என்று கமலநாதன் கேட்டான், தன் மேஜைமேல் இருந்த காகிதக்கட்டை ஒழுங்குபடுத்தியவண்ணம்.

“உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும்.”

“என்ன?”

“சகுந்தலாமீது போலிசார் குற்றம் சாட்டி யுள்ளார்கள்.”

“எந்த சகுந்தலாமீது?”

“அனாதைச் சிறுவர் இல்லத்தில் வேலை பார்த்தாளே, அந்தப் பெண்தான்.”

“எனக்கு ஞாபகமில்லை!”

“அவள் கடற்கரைப் பக்கம் போகும் பொழுது தவறி கடலில் விழுந்துவிட்டாள், குழந்தை இறந்துவிட்டது, அவளும் மூர்ச்சை யாகிவிட்டாள். அதற்காக அவள்மீது அநி யாயமாகப் போலிஸ் கேஸ் போட்டுவிட்டது.”

“அநியாயமாக என்று அவ்வளவு விரை வில் சொல்லிவிடாதே!”

“எது எப்படியிருந்தாலும், அவள்மீது போலிசார் குற்றஞ்சாட்டிவிட்டார்கள்! இப் பொழுது என்ன செய்யலாம்?”

“என்ன செய்யமுடியும்? வழக்கு தொடுக் கப்பட்டது என்றால், எதிர் தரப்பில் வழக்காட வேண்டும்.”

“அதற்குத்தான் வந்தேன். சகுந்தலா பக்கம் நீங்கள்...”

“அது முடியாது. நான் அரசாங்கத்து வக்கீலாக இருப்பவன். அரசாங்கம் அவள் மீது குற்றம்சாட்டும்பொழுது அரசாங்கத்தை எதிர்த்து நான் வழக்காடக்கூடாது.”

கோர்ட் சேவகன் ஒருவன் காகிதக் கட்டு களை கொண்டுவந்து, வைத்துவிட்டுப் போனான். அவைகளை எடுத்துக் கமலநாதன் புரட்டினான்.

“அப்படியானால் சகுந்தலா பக்கம்......”

“நான் யாராவது நல்ல வக்கீலைப் பார்த்துச் சொல்கிறேன்.”

தங்கத்திற்குக் கோபம் வந்தது. “நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம். நாங்கள் பார்த் துக்கொள்கிறோம். நான் போய்......”

கமலநாதன் சிரித்துக்கொண்டான். “ஏன் உனக்கு இப்படிக் கோபம் வருகிறது? ஒன்று மில்லாததற்கு இப்படிக் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறாயே! அவள் குற்றம் செய்யவில்லை யென்றால், விடுவித்துவிடுவார்கள். அவள் மீது வேண்டுமென்று போலிசார் ஏன் வழக் குத் தொடுப்பார்கள்.”

கமலநாதன் சொல்வதும் சரியென்று தங் கத்திற்குப் பட்டது. நேற்று அவசரப்பட்டு போலீஸ் அவளைக் கைதுசெய்து கொண்டு போனபோதிலும், அவள்மீது குற்றமில்லை யென்றதும், விடுவித்துவிடுவார்கள். ஆனால் ஒருவாரங்கழித்து வழக்கு விசாரணைக்கு வரு மென்று மாஜிஸ்ட்ரேட் சொன்னாரே! தங்கத் திற்கு நிலைமை புரியவில்லை, தன் கணவனைக் கேட்பதைவிடக் குலசேகரனைக் கண்டு கேட்க லாம் என்று தோன்றியது.

“சரி! நான் போகிறேன்!”

“எங்கு?”

“நீங்கள்தான் ஒன்றும் சரியாகச் சொல்ல மாட்டீர்களே! நான் போய் சேகரனைக் கேட்கப் போகிறேன்! அவன் எல்லாம் சொல்வான்.”

குலசேகரனைப்பற்றி அவ்வளவு உரிமை யுடன் அடிக்கடி தங்கம் பேசிக்கொள்வது கமலநாதனுக்குப் பிடிப்பதில்லை. அதிலும் இப்பொழுது தன்னால் முடியாது என்றதும், அவனைப் பற்றிக் குறிப்பிட்டது அவனுக்குச் சற்றுக் கோபத்தையும் சிறிது மனக்கசப்பை யும் தந்தது.

* * *

அன்று மாலை, தங்கம் கேட்டுக்கொண்டதற் கிணங்க, குலசேகரன் வந்தான். தங்கம் சொல் லியதைத்தவிர, முழு விபரங்களும் அவனுக் குத் தெரியவில்லை. சகுந்தலாவை நேரில் பார்த்து, அவளை விசாரிக்கவேண்டுமென்று வந்திருந்தான்.

முதல் நாளிரவு தங்கம் அழைத்துவந்ததி லிருந்து சகுந்தலா யாரிடமும் எதுவும் பேச வில்லை. நடுப்பகல் மட்டும் சிறிது உணவு சாப்பிட்டதும்—அதுவும் தங்கம் கட்டாயப் படுத்தியதால் சாப்பிட்டதாகும்—ஒரு அறை யில் அடைந்துகிடந்தாள்.

குலசேகரனை உட்காரச் சொல்லிவிட்டு, தங்கம் போய் சகுந்தலாவை அழைத்துவந் தாள். தலையைச் சற்று ஒதுக்கிக்கொண்டு சகுந்தலா வந்து அமர்ந்தாள்.

“ சகுந்தலா ! இவர்தான் குலசேகரன் ; உனக்காக வழக்காடப் போகும் வக்கீல் !” என்று தங்கம் அறிமுகப்படுத்தினாள். சகுந் தலா அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, உட்கார்ந்தாள். அவளுடைய கண்கள் அருகி லுள்ள பொருள்களைப் பார்ப்பதாகத் தெரிய வில்லை ; தூரத்தில், தெரியாத ஒன்றைத் துழவிக்கொண்டிருந்தன.

சகுந்தலாவிடம் என்ன பேசுவது என்று தெரியாமல், குலசேகரன் உட்கார்ந்திருந்தான். அவன் தயங்குவதைப் பார்த்ததும் தங்கம் மறுபடியும் பேச்சைத் துவங்கினாள்.

“ சகுந்தலா ! இந்த வழக்கைப் பற்றி இவ ரிடம் சொன்னேன் ; அதைப்பற்றி முழு விப ரங்களையும் உன்னிடம் கேட்கவேண்டுமென்று வந்திருக்கிறார்.”

“ மன்னிக்கவும். நான் வழக்காடப்போவ தில்லை. எனக்கு வக்கீல் யாரும் வேண்டாம்!” என்று சகுந்தலா எழுந்தாள்.

“ உட்கார், சகுந்தலா ! அவசரப்படாதே ! தவறி விழுந்ததற்கு, தற்கொலைபுரிய கடலில் விழுந்ததாகப் போலீஸ் குற்றஞ்சாட்டினால், நாம் அப்படியே விட்டுவிடக்கூடாது ” தங் கம் சொன்னாள்.

“ ஆமாம் ! தற்கொலைக்கு முயற்சித்ததாக அவர்கள் குற்றஞ்சாட்டினாலும், நடந்த விதத் தைத் தக்க சாட்சியங்களுடன் நாம் எடுத்துக் காட்டினால், தற்பொழுது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டை நீக்கிவிடுவார்கள் !” குலசேக ரன் சொன்னான்.

சகுந்தலா அவர்களிருவரையும் மாறி, மாறிப் பார்த்தாள். “ ஒன்றும் வேண்டாம் ! தவறி விழுந்துவிடவில்லை ; வேண்டுமென்று தான், தற்கொலை புரியத்தான் நான் கடலில் விழுந்தேன் !” என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டு, சகுந்தலா போய்விட் டாள்.

தங்கம் திடுக்கிட்டு உட்கார்ந்தாள், அவள் சிறிதும் எதிர்பாக்கவில்லை. சகுந்தலா தற் கொலை புரிந்துகொள்ளச் சென்றிருப்பா ளென்று. குலசேகரனும் பேசாமல் உட்கார்ந் திருந்தான்.

“ இனிமேல் என்ன செய்வது, அவளே ஒத்துக்கொள்ளுகிறாள், தான் தற்கொலை செய்துகொள்ளத்தான் கடலில் குதித்ததாக ! தற்கொலை குற்றம் நிச்சயமாக நிரூபிக்கப்பட்டு விடும், தண்டனையும் தரப்படும் ” என்று தங்கம் சொன்னாள்.

“ இல்லை, தங்கம் ! இந்தப் பெண்ணைப்பற்றி உனக்கு முன்பு நன்றாகத் தெரியுமா ?”

“ அதிகமாகத் தெரியாது. ஒருநாள் மூர்ச் சைபோட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட் டாள். பின் பிரசவமடைந்ததும், அனாதைச் சிறுவர் பள்ளியின் மேற்பார்வைக்காக நியமிக் கப்பட்டாள்.”

“ வேலை பார்க்கும்பொழுது, அவளுடைய போக்கில் நடவடிக்கைகளில் ஏதாவது ஆச் சரியப்படத்தக்க விதத்தில் நடந்ததுண்டா ?”

“ அப்படியென்றால்...”

“ அதாவது பைத்தியக்காரத்தனமாக ! சித்தங்கலங்கியவர்கள், தங்களையறியாமலே தற்கொலைக்குத் தயாராகிவிடுவதுண்டு ! இந் தப் பெண்ணை இப்பொழுது பார்த்தால்கூட, சரியான மனநிலையில் இருப்பதாகத் தெரிய வில்லை. கண்ணில் வரண்ட பார்வையும், பேச் சில் கடுமையும், அவளுடைய மனதில் உள்ள குழப்பத்தைக் காட்டுகின்றன !”

“ ஏன், இதையெல்லாம் சொல்லுகிறாய் ? அவள் செய்த குற்றத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் !”

“ சித்த பிரமையுள்ளவர்கள் செய்கிற குற் றத்திற்குத் தண்டனை தரமுடியாது, அது உண்மையான சித்தப்பிரமை யென்று நிரூபிக் கப்பட்டால் ! தற்கொலை புரிந்துகொள்ள, சாதாரண மனநிலையிலுள்ளவர்கள் முன்வருவ தில்லை. தற்காலிகமாக ஏற்படுகிற சித்தப்பிர மையே தற்கொலைக்குக் காரணமாகும். ஆத லால் தற்கொலைக்குமுன் அவள் எப்படியிருந் தாள், என்பதை நாம் பார்க்கவேண்டும். அவ ளுடைய குடும்பத்தில் இதற்குமுன் யாராவது பைத்தியம் பிடித்தவர்கள் இருந்தார்களா, தற்கொலை செய்துகொண்டு இறந்தார்களா என்று தெரிந்தால் நல்லது !”

(தொடரும்)

கிள்ளியைத் திருத்திய கிழார்

[எழினி]

மலையமான் திருமுடிக்காரி திருக்கோவிலூரைத் தலைநகராகக் கொண்ட பெண்ணையாற்றங்கரையின்கண் உள்ள மலாடு என்ற நாட்டின் பகுதியை ஆண்டுவந்த அரசன் ஆவான். அவன் கடையேழு வள்ளல்களில் ஒருவன். அவனது காலம் ஏறத்தாழ ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னது என்னலாம். அந்த நாட்களில் அவனைப்பற்றிப் பாடாத புலவர்களின் நாவில்லை; கேள்விப்படாத குடிகளின் செவிகளில்லை. அவனுடைய புகழ் சேரசோழ பாண்டிய ஆகிய மும் மண்டலங்களிலும் பரவி நின்றது. அந்தக் காலத்தில் வாழ்ந்த பிற நாட்டு மன்னர்கள் அவன்மீது அழுக்காறு கொண்டு அவனை அழித்தொழிக்க திட்டமிட்டிருந்தனர் எனில், அதில் வியப்பு ஒன்றுமில்லை. அந்த அளவுக்கு அவன் ஓங்குபுகழ் எய்தியிருந்தான்.

அப்பொழுது சோழநாட்டைக் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற பேரரசன் ஆண்டு வந்தான். அவன் குளமுற்றம் என்ற இடத்தில் இறுதியில் இறந்துபட்டதால் பிற்காலத்தில் அந்த அடைமொழியோடு அழைக்கப்பட்டான். அவனுக்கு உறையூர் தலைநகராகும். அவன் படைவலியிலும் போர்த்திறனிலும் மிக்கு விளங்கினான். மலையமான் திருமுடிக்காரி மிகு புகழோடு விளங்கியது அவனுக்குப் பொறாமையைத் தந்தது. திருமுடிக்காரியைத் தன் அடிபணியும் அரசனாகக்கொண்டுவந்து, அவனது சீரையும் சிறப்பையும் அழிக்க வேண்டும் என்று கிள்ளிவளவன் திட்டமிட்டான்.

காரி கிள்ளிவளவனுக்குக் கீழ்ப்படிய மறுத்தான். இருவர்க்கிடையே பகையுணர்ச்சி மண்டு எழுந்தது. கிள்ளிவளவன் தனது பெரும்படையைத் திரட்டிக்கொண்டு சென்று திருக்கோவிலூரை முற்றுகையிட்டான். காரி தன்னால் முடிந்தவரையில் முற்றுகையை எதிர்த்து நின்றான். சோழனின் பெரும் படைக்கு முன்னால் காரியின் சிறுபடை ஏதும் செய்யமுடியாமற்போகவே, சோழனது படை கோட்டையை உடைத்துக்கொண்டு உட்புகுந்து திருக்கோவிலூரைச் சூறையாடத் தொடங்கிற்று. போரில் திருமுடிக்காரி மாய்ந்தான். கிள்ளிவளவன் வெற்றி முழக்கோடு வீறுடன் சோழநாடு திரும்பினான். திரும்பும் போது திருமுடிக்காரியின் இருகுழந்தைகளைச் சிறைப்பிடித்துத் தன் தலைநகருக்குக் கொண்டு வந்தான்.

திருமுடிக்காரியை வென்றும், அவனது இரு பிள்ளைகளையும் சிறைப்பிடித்துக்கொண்டு வந்தும் கிள்ளிவளவனின் வெஞ்சினம் தணிந்தபாடில்லை. அந்தச் சிறுவர்களை யானைக் காலின் கீழ்க்கிடத்தி, அதனைவிட்டு அவர்களைத் துவைக்கும்படி செய்து, அந்தக் காட்சியைக் கண்ணாரக்கண்டால்தான், தன் வெஞ்சினம் சிறிதளவு ஆறும் என்று கிள்ளிவளவன் எண்ணினான். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி ஏவலாளர்க்குக் கட்டளையிட்டான்.

அரசனின் நாளோலக்க மண்டபத்தின் முன்னுள்ள பரந்தவெளி. வேடிக்கைபார்க்க குடிமக்கள் ஏராளமாகக் குழுமியிருந்தனர். கூட்டத்தினரை ஒழுங்குபடுத்திக்கொண்டு படைவீரர்கள் சூழ்ந்துநின்றனர். ஒரு பக்கத்தில் உயர்ந்ததொரு மேடை அமைத்துக் கொண்டு அதில் அரசன் கிள்ளிவளவன் வீற்றிருந்தான். அமைச்சர் அரசாங்க அலுவலாளர்கள் முதலாயினோர் அரசனின் இரு மருங்கிலும் வீற்றிருந்தனர். அரசன் வந்து தன் இருப்பிடத்தில் அமர்ந்துவிட்டான் என்பதன் அறிகுறியாக முரசுகள் ஒலித்தன; கொம்புகள் முழங்கின. தவழும் பருவத்தைக் கடந்து நடக்கும் பருவத்தை அடைந்திருந்த அந்த இரு சிறுவர்களும் காவலாளர்களால் களத்தின் நடுவே கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். சுற்றிலும் பெருங்கூட்டம் சூழ்ந்திருக்க, தாங்கள் மட்டும் தன்னந்தனியே நடுவே கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்ட சிறுவர்கள் அஞ்சி அழத் தொடங்கினார்கள். கண்ணீர் தாரை தாரையாக வழிய இருவரும் தேம்பித்தேம்பி அழுது கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் அவர்களை இடறுவதற்கென்று யானை ஒன்று அவர்கள் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. யானையைக் கண்ட சிறுவர்கள் அழுகையை

மறந்துவிட்டு அதனை வியப்புணர்ச்சியோடு வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். அவர்கள் அறிவார்களா அந்த யானை தங்களைக் கொல்லுவதற்கென்று தங்கள் முன்னே கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை? அவ்வளவு பச்சிளங் குழந்தைகள் அவர்கள்! ஏவலாளர்கள், யானையை அக்குழந்தைகளின் மீது ஏவ, அரசனின் இறுதிக் கட்டளையை எதிர்பார்த்திருந்தனர்.

அறிவுத்திறனும் அஞ்சா நெஞ்சமும் இரக்கப் பண்பும் படைத்த **கோவூர்கிழார்** என்ற புலவர் பெருந்தகையாளர், சோழன் கிள்ளி வளவனைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று கருதி உறையூர் வந்து சேர்ந்தவர், கிள்ளி வளவன் எங்கே இருப்பான் என்பதைப்பற்றி அறிந்துகொள்ள, அரண்மனை ஏவலாளன் ஒருவனிடம் உசாவினர். போரிலே சிறைப் பிடித்துவந்த பகைவர்களுக்குக் கொலைத் தண்டனையை நிறைவேற்றும் பொருட்டு, நாளோலக்க மன்றத்தின் எதிரிலுள்ள பரந்த வெளிக்குச் சென்றிருக்கிறான் என்று ஏவலாளன்மூலம் புலவர் தெரிந்துகொண்டார். கிள்ளிவளவனை அங்குப் போய்க் காணலாம் என்று கருதி புலவர் கொலைக்களம் நோக்கிச் சென்றார்.

கொலைக்களத்தில் போர்வீரர்கள் சுற்றிலும் அணிவகுத்து நிற்க, அவர்களைச் சூழ்ந்து பொதுமக்கள் கூடிநின்று வேடிக்கை பார்க்க, அரசன் ஒருபக்கத்தில் வீற்றிருந்ததைக் கோவூர் கிழார் பார்த்தார்.

"யாருக்குக் கொலைத்தண்டனை நிறைவேற்றப்படுகிறது?" என்று புலவர் அங்கு நின்ற ஒருவரிடம் உசாவினர். "மலையமான் திருமுடிக்காரியின் இரண்டு குழந்தைகளை யானைக் காலின்கீழ்க் கிடத்திக் கொல்லும் தண்டனை நிறைவேற்றப்படப்போகிறது!" என்று கூறக் கேட்டார். புலவர் உடனே திடுக்கிட்டுத் திகைத்துப்போய்க் கூட்டத்தினரை விலக்கிக் கொண்டு உட்புகுந்தார். படைவீரர் இருவர் இருபுறமும் நிற்க, இரு சிறு குழந்தைகள் திக்கற்றவர்களாய் யானையைப் பார்க்கும் போது மகிழ்ச்சியுற்றும், கூடியிருந்த போர் வீரர்களைப் பார்க்கும்போது மருட்சியுற்றும் கண்ணீர் சிந்திக் கலங்கியிருக்கக் கண்டார். எதிரிலே இடறுவதற்கென்று கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்த யானையையும் கண்டார். இந்தக் காட்சியை அவரால் கண்டுகொண்டிருக்கமுடியவில்லை. புலவர் போர்வீரர்களின் கட்டுக்காவலை தள்ளிக்கொண்டு களத்தில் நுழைந்து அரசன் வீற்றிருந்த இடத்தை
நோக்கி விரைந்து நடந்தார். புலவர் கோவூ
கிழார் என்று அறிந்தவுடனே போர்வீரர்க
அவரைத் தடுக்காது விட்டுவிட்டன
யானையை அச்சிறுவரின்மீது ஏற்றுவத
கான ஆணையை அரசன் இடுவதற்கு முயலு
போது, ஏதோ உரத்த குரல் ஒன்று கேட்ட
அரசன் குரல் வந்த பக்கம் திரும்பிப்பார்
தான். "நிறுத்து! வேந்தே, நிறுத்து!" என்
கூவிக்கொண்டு புலவர் அரசனை நோக்கி
சென்றார். கூடியிருந்தோர் அனைவரும் அ
வற்றுப் பேச்சற்றுப் புலவரின் போக்கி
பார்வையைச் செலுத்தி நின்றனர். புலவ
கோவூர் கிழார் ஏதோ கூவிக்கொண்டு தன்
நோக்கி வருவதை அரசன் உணர்ந்தா
எழுந்து நின்றான். "நிறுத்து! வேந்
நிறுத்து!" என்ற சொற்கள் புலவரின் வா
னின்றும் உரத்த குரலில் வெளிப்படுவதை
கேட்டறிந்தான்.

கோவூர் கிழார் அரசன் அருகிலே வந்
நின்றார். அரசன் அவருக்கு அஞ்சலி செ
தான். புலவரும் அஞ்சலி செய்துவிட்
"என்ன செயல் செய்தாய்?" என்று படபட
பும் சினமும் பொங்க உரத்த குரலில் கேட்டா
அரசன் நடுநடுங்கிப்போய், "புலவர் பெ
மானே! ஏன் இவ்வளவு சினம்? நான் என்ன
குற்றம் செய்தேன்?" என்று மெல்ல கேட்
நின்றான்.

"என்ன குற்றம் என்றா கேட்கிறாய்?
என்ன செய்துகொண்டிருக்கிறாய் என்ப
உனக்குப் புலப்படவில்லையா? இப்பொழு
நீ செய்துகொண்டிருக்கிறாயே, இந்தச் செ
லுக்கு என்ன பெயர்?" என்று புலவர் கடு
யாகக் கேட்டார்.

"பகைவர்களுக்குத் தரவேண்டிய தண்
டனையை முறைப்படி தர முற்பட்டிருக்கிறேன்
இதில் தவறு என்ன இருக்கிறது என்ப
எனக்குப் புலப்படவில்லையே!" என்று அரச
வினயமாய்க் கேட்டான்.

அதற்குப் புலவர் அந்தச்சிறுவர்களை
சுட்டிக்காட்டி, "இவர்கள்தாம் உன் தகுதி
கேற்ற பகைவர்களா? இந்தப் பகைவர்களை
தான் நீ உன் முழு வலிவாற்றல்கொண்
எதிர்க்க முற்பட்டிருக்கிறாயா? நன்றாக இரு
கிறது உனது செயல்! அறநெறியை ஏ
அடியோடு மறந்துவிட்டாய்?" என்று புலவ
வினவினர்.

"இவர்களுடைய தந்தை திருமுடிக்கா
எனக்கு அடங்க மறுத்தான்; என்னை எதிர்
துப் போரிட்டான்; எனவே அவனை

போரிலே கொன்று வெற்றிபெற்றேன். அவனுடைய மக்களை முறைப்படி சிறைப்படுத்தினேன். இப்பொழுது அவர்களை முறைப்படி கொலை செய்கிறேன் !'! என்று அரசன் கிள்ளிவளவன் கூறினான்.

"மன்னனே ! உன்னிடம் வீரம் இருப்பது கண்டு மகிழ்கிறேன் ; ஆனால் உன்னிடம் ஈரம் அறவே இல்லாதது கண்டு இரங்குகிறேன். வேந்தே ! அந்தச் சின்னஞ் சிறார்களைப் பார்! அவர்களைக் கொல்லவும் உன் மனம் துணிவு பெறுகிறதா? அவர்கள் இயல்பாக அழுகின்ற அழுகையையும் மறந்து, யானையைக் கண்டவுடன் வேடிக்கைப் பார்த்து நிற்கும் காட்சியைப் பார்! இந்த மன்றத்தைப் பார்த்தவுடனேயே அவர்கள் மருண்டு புதிய துன்ப உணர்வு உடையவர்களாய் நிற்கும் அவர்களின் பச்சிளந் தன்மையைப் பார்! உனக்கு இரக்கவுணர்வு அடியோடு அற்றுப்போய்விட்டதா?" என்று புலவர் கேட்டார்.

"புலவர் பெருமானே ! பிழையிருப்பின் பொறுக்கவேண்டும் !"

"நான் பிழைபொறுப்பதல்ல முக்கியம் ; நீ அறநெறியை—அருள்நெறியை அறிந்தாயா என்பதுதான் முக்கியம். நீ யார் என்பதையாவது உணர்ந்தாயா ?"

"தாங்கள் தான் உணர்த்தவேண்டும் !"

"மன்ன ! நீயோ, பருந்து ஒன்று துரத்திக்கொண்டுவர, அதனின்றும் தப்பி ஓடிவந்த புறா ஒன்று அடைக்கலம்புக, அதனுடைய துன்பத்தைப் போக்கியதோடு மட்டுமல்லாமல், பிற உயிர்களின் துன்பங்களையும் நீக்கிய சிபி என்ற சோழனின் மரபில் வந்தவன் ; இரக்கப் பண்பாட்டை வளர்த்த குடியைச் சார்ந்தவன். அவ்வளவு பெருமைக்குரியவன் ! இச்சிறுவர்கள் யார் தெரியுமா ?"

"சொல்லுங்கள், புலவர் பெருமானே !"

"இச்சிறுவர்களோ, அறிவினால் உலக இயற்கைகளை உழுது புதுக்கருத்துக்களை விளைத்துக்கொடுத்து வாழ்க்கை நடத்தும் புலவர்களின் வறுமைத்துன்பத்தைக் காணுவதற்கு அஞ்சி, அவர்களுக்குத் தமது செல்வத்தைப் பகுத்துக்கொடுத்த வள்ளலின் மரபில் வந்தவர்கள் ; அண்டினவர்க்கு அருளென்னும் குளிர்ந்த நிழலை ஓயாது தந்துகொண்டிருக்கும் வள்ளல் மரபில் வந்தவர்கள். அப்படிப்பட்டவர்களை நீ கொல்லத் துணிகிறாயே, இது அடுக்குமா ?"

"புலவீர் ! தாங்கள் என்ன சொல்லுகிறீர்களோ, அதன்படி நடக்கத் திண்ணமாக இருக்கிறேன் !"

"அரசே ! நான் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது ? உன்னுடைய மரபின் இயல்பையும் கூறினேன் ; இச்சிறுவர் மரபின் இயல்பையும் கூறினேன். நான் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிவிட்டேன். நான் சொல்லியதையெல்லாம் நீ கேட்டறிந்திருக்கிறாய் என்றால், இனி நீ விரும்பியதைச் செய் ! அவ்வளவுதான் நான் சொல்வதற்கு இருக்கிறது!" என்று கோவூர் கிழார் கூறினார்.

புலவரின் சொற்கள் அரசனின் உள்ளத்தைப் பெரிதும் உருக்கின. கிள்ளிவளவன் தான் செய்ய முற்பட்ட இரக்கமற்ற செயலுக்காகப் பெரிதும் நாணமுற்றான். "புலவர் ஏறே ! தங்கள் விருப்பம்போல் நடக்கிறேன். இப்பொழுது இரக்க உள்ளம் பெற்றுவிட்டேன். இச்சிறுவர்களை விடுவித்து மன்னர் குடிக்குரிய தகுதிகளை அவர்களுக்கு வழங்குகிறேன் !" என்று மன்னன் புலவரிடம் உறுதிமொழி கூறினான். புலவர் மிகவும் மகிழ்ச்சியுற்று மன்னனை ஆரத்தழுவிக்கொண்டார்.

இரக்கத்துக்குப் பரிந்துபேசிய புலவரின் திறனையும், வன்நெஞ்சத்தை அருள் நெஞ்சமாக மாற்றிக்கொண்ட கிள்ளிவளவனின் போக்கையும், அங்குக் கூடியிருந்தோர் பெரிதும் பாராட்டிப் போற்றினர்.

பின்னர் அச்சிறுவர்களைக் கோவூர்கிழார் தழுவி உச்சி மோந்தார். சிறுவர்களும் அச்சந் தெளிந்து அவரோடு மகிழ்ச்சியுடன் செல்லலாயினர்.

ஃ ஃ ஃ

"சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக் கிடுவுழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது" என்ற அடிக்குறிப்போடுகூடிய **புறநானூறு 46**-ம் செய்யுளில் வந்துள்ள கருத்துக்களைக் கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமே மேலே தென்படுவதாகும்.

நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை ;
இவரே, புலன்உழு துண்மார் புன்கண் அஞ்சித்

தமதுபகுத் துண்ணும் தண்நிழல் வாழ்நர்;
களிறுகண் டழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறுஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடையர்;
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே.

[புறநானூறு—46]

[பொழிப்புரை : நீயோ, புறு உற்ற துன்பம் அல்லாமல் பிற உயிர்கள் உற்ற துன்பம் பலவற்றையும் தீர்த்த சோழனது மரபில் தோன்றியவனுவாய். இவர்களோ, அறிவால் உழுதுண்ணும் கற்றோரது வறுமைக்காக அஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலை யுடையவராய் வாழ்வாரது மரபில் தோன்றியவராவார்; இவர்கள் இப்பொழுது களிற்றைக் கண்டு தம் இளமையால் தாம் முன்பு அஞ்சி அழுகின்ற அழுகையை மறந்த சிறிய தலையையுடைய சிறு பிள்ளைகள். மன்றத்தை நோக்கி அஞ்சிப் பார்த்து முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். இவ்வியல்புகளைக் கேட்டனையாயின். நீ விரும்பியதைச் செய்வாயாக! புலன் - அறிவு; புன்கண் - துன்பம்; தண் – குளிர்ந்த; வெருவி - அஞ்சி; மன்று - மன்றம்.]

ஃ ஃ ஃ

உண்மைக்கும் உரிமைக்கும் நேர்மைக்கும் இரக்கத்துக்கும் பரிந்துபேசும் பண்பு அக்கால புலவர்களிடத்தில் இருந்த பான்மையும், புலவர்களின் சொற்படி தம் போக்குகளை மாற்றியமைத்துக்கொண்டு, அரசர்கள் புலவர்களின் அறிவுரைக்கு மதிப்பு அளித்த தன்மையும் இச்செய்யுளின்மூலம் இனிது அறியப்படுகின்றன.

அரசர்களின் எதிரில் அஞ்சாது நின்று, அவர்களது குற்றங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றைத் திருத்திக்கொள்ளுமாறு வற்புறுத்திக்கூறும் அறிவாற்றல் கோவூர்கிழார் இடத்தில் மிகச் சிறந்து காணப்பட்டது என்னலாம். கோவூர்கிழார் கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூறி அவனைத் திருத்தியதைப் போலவே, வேறு சில அரசர்களையும் அவர் திருத்திய செய்திகளைப் புறநானூற்றில் சிறக்கக் காணலாம்.

அழுதுகொண்டிருந்த இரு சிறுவர்களும், யானையைக் கண்டவுடன் அழுகையை மறந்து அதனை வேடிக்கைப் பார்க்கத் தொடங்கின என்று புலவர் சுட்டிக்காட்டியிருப்பது; அவர்கள் எவ்வளவு இளஞ் சிறுர்களாக இருந்திருக்கின்றனர் என்பதைத் தெளிவாக்குகின்றது. அது மட்டுமல்லாமல், அந்த யானை தங்களைக் கொல்லத்தான் வந்திருக்கிறது என்பதைக் கூட அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவ்வளவு சிறுவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதையும் புலவரின் சொற்றொடர் சுட்டிக் காட்டுகின்றது.

"கேட்டனையாயின் நீ வேட்டது செய்ம்மே" என்று கோவூர்கிழார் குறிப்பிடுவது அரசனை அவர் சிறிதும் கெஞ்சிக் கேட்கவில்லை என்பதையும், அவர் மிகப் பெருமிதத்தோடுதான் விளங்கினர் என்பதையும் உணர்த்துகின்றது.

புலவர்களுக்கு அக்கால அரசியலில் எவ்வளவு சிறந்த செல்வாக்கும், மதிப்பும் இருந்தது என்பதை இச்செய்யுள் நன்கு எடுத்தியம்புகின்றது.

நன்றி அறிவிப்பு

எம்மிடம் அன்பும் ஆதரவும் காட்டிப், பொங்கல் திருநாளை முன்னிட்டு எமக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பி எம்மை மகிழ்வித்த அன்பர்கள் அத்துணைப்பேர்க்கும் எம் உளங்கனிந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்! அத்துணைப்பேர்க்கும் எம் வாழ்த்துக்கள் உரியவாக! தனித் தனியாகத் தெரிவித்துக்கொள்ள இயலாமைக்கு அனைவரும் பொறுத்தருள்வார்களாக!

இரா. நெடுஞ்செழியன்.

பச்சிளம் பருவந்தொட்டே பயிற்சி

[இரா. நெடுஞ்செழியன்]

மனித சமுதாயம் திருந்தவேண்டுமானால், எதிர்காலச் சமுதாயமாக மாறும் இளங்குழந்தைகள், அக்குழந்தைப் பருவத்திலேயே திருத்தப்படவேண்டும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழிக்கேற்ப ஐந்து வயதில் திருத்தினால்தான் ஐம்பதாவது வயதிலும் திருத்தத்தைக் காண முடியும்.

ஒவ்வொரு குழந்தையும் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் திறனைப் பெறுமளவுக்குக் கற்பிக்கப்படவேண்டும். பிறர்க்குப் பெருஞ்சுமையாக அமைந்துவிடாத அளவுக்குத், தன்னைத்தானே தயாராக்கிக்கொள்ளும்படியாக, ஒவ்வொரு குழந்தையும் கல்வி கற்பிக்கப்படவேண்டும்.

எவை எவை மனித சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன் அளிக்கின்றனவோ அவையெல்லாம் மதிக்கப்படவேண்டியன என்றும், பிறருடைய உழைப்பில் யார் யார் வாழ்கிறார்களோ அவர்களெல்லாம் சமூகத்தின் பகைவர்களாக எண்ணப்படவேண்டியவர்கள் என்றும் ஒவ்வொரு குழந்தையும் கற்பிக்கப்படவேண்டும். சமூகத்துக்குப் பயனுள்ள செயலைச் செய்வதுதான் உண்மையான 'கடவுள் வழிபாடு' என்றும், அறிவோடு கூடிய அருந்தொழிலைச் செய்வதுதான் உண்மையான கடவுள் வாழ்த்துரை' என்றும் ஒவ்வொரு குழந்தையும் கற்பிக்கப்படவேண்டும்.

சிந்திக்கவும், ஆராய்ந்தறியவும், பகுத்தறிவு நெறியில் நின்று ஒழுகவும், எதனையும் ஊன்று கவனிக்கவும், தோய்ந்த பழக்க அறிவைப் பெறவும்படியான அளவுக்கு ஒவ்வொரு குழந்தையும் கற்பிக்கப்படவேண்டும். குழந்தைகள் தங்கள் புலனறிவு அத்தனையையும் சரியான முறையில் பயன்படுத்தும் முறையில் கற்பிக்கப்படவேண்டும். எந்தவழி உண்மையான பலனை அளிக்குமோ அந்த வழியில் அவர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். பொருள்களை உருவாக்குவதற்குக் கருவிகளை எப்படிப் பயன்படுத்துவது, தம்முடைய கைகளை எப்படிப் பயன்படுத்துவது, தம்முடைய கருத்துக்களை எப்படிப் பயன்படுத்துவது என்று அவர்கள் கல்வி கற்பிக்கப்படவேண்டும். பயனற்ற அறிவையும் திறமையையும் பெறுமளவுக்குக் குழந்தைகளின் வாழ்வு வீணாக்கப்பட்டுவிடக் கூடாது. இறந்துபோன பல மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கும், நடக்காத இறந்த காலக் கற்பனைக் கதைகளை வரலாறு என்று கருதிக் கற்றுக்கொள்வதற்கும் பற்பல ஆண்டுகள் வீணாகச் செலவழிக்கப்படக்கூடாது. பழங்காலத்தில் நடந்த பெரும்பெரும் சண்டைகளின் நாட்களையும், பழங்காலத்து அரசர்களின் பிறப்பு இறப்புகளையும் மனப்பாடம் செய்துவைத்துக்கொள்வது எந்தவகையிலும் பயன்படாததாகும். குழந்தைகள் தத்துவம் வளர்ந்த வரலாறு பற்றியும், ஒவ்வொரு நாடும், இனமும் எப்படி வளர்ச்சியடைந்தன என்பது பற்றியும், தத்துவக்கலைகள் எப்படி முன்னேற்றம் அடைந்தன என்பதுபற்றியும். எல்லாவற்றையும்விட அறிவியல்கள் எப்படி வளர்ந்தன என்பதுபற்றியும் கற்பிக்கப்படவேண்டும்.

குழந்தைகள் பணத்தைப்பற்றிய நாணயத்துக்கு மட்டுமல்லாமல், உள்ளத்தைப்பற்றிய நாணயத்துக்கும் முக்கியத்துவம் அளிக்குமாறு கற்பிக்கப்படவேண்டும். இறுதிவரையில் உண்மையாகவே நடந்துகொள்ளவும், உண்மைக் கருத்துக்களையே வெளியிடவும், அவர்களுடைய உண்மையான உள்ளக்கிடக்கைகளை வெளியிடவும் குழந்தைகள் பயிற்றுவிக்கப்படவேண்டும். பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் உண்மையாக நடந்துகொள்ளவேண்டும் என்று விரும்புவார்களேயானால், முதலில் அவர்கள் உண்மையாக நடந்துகாட்டவேண்டும். பொதுவாக ஆணவ ஆதிக்கக்காரர்களின் போக்கு, அவர்களை ஒட்டி வளர்கின்ற அவர்களுடைய பிள்ளைகளுக்கு அப்படியே படிந்துவிடுகின்றன. பெரும்பாலோரின் எண்ணத்துக்கு ஒத்துவருவதாகப் பாசாங்கு செய்யும் ஆடவரும் பெண்டிரும், ஒருவகையில் நினைத்து வேறு

ண் பிச்சைக்காரர்களோ மகிழ்ச்சியோடு வாழும் மனித சமுதாயத்தைச் சார்ந்தவர்ளாகமாட்டார்கள். சமுதாய ஏணியின் அடிப்படியில் இருப்பவன் எப்பொழுது மேலேறுவோமோ என்று ஓயாமல் ஆசைப்ட்டுக்கொண்டிருக்கிறான்; ஆனால் ஏணியின் ச்சியில் இருப்பவனோ எப்பொழுது கீழே ழ்வோமோ என்று ஓயாமல் அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறான். முன்னவன் பொருள் கேட்கிறான்; பின்னவன் மறுக்கிறான். ஓயாமல் றுத்து மறுத்து பணக்காரனின் நெஞ்சம் கல்நெஞ்சமாக மாறிவிடுவதோடு மட்டுமல்லாமல், அவன் கை பேராசைகொண்டதாகவும் மாறி விடுகிறது.

போதுமான அளவு அறிவுடைமையும், பாதுமான அளவு உண்மையான பெருந்தன்மையும் கொண்ட ஒருசிலர்தான் நல்ல வாய்ப்னை வாழ்க்கையில் ஏற்படுத்திக்கொள்வற்கு இலக்குடையவர்களாக இருக்கிறார்கள். ழக்கப்படிப் பார்த்தால் நல்ல வாய்ப்பு அவர்ளைப் பற்றிக்கொள்கிறது, நல்ல வாய்ப்பை அவர்கள் தாங்கள் போற்றுவதற்குரிய ஆண்டயாக மதித்து அடிமைகள்போல் அதற்கு வலைசெய்து பாடுபடுகிறார்கள். எவனொருன் நல்ல நேர்மையான தொழிலைச்செய்து, நர்மையான முறையில் பொருளை ஈட்டி, நர்மையான முறையில் வாழ்க்கை நடத்தி, ருங்கால வாழ்வுக்கும் சிறிது பொருள் துக்கித், தன் மக்களை நன்கு பயிலவைத்துத், ான் விரும்பும் ஏனையோரையும் கூடுமான ரையில் காப்பாற்றி, ஈத்துவக்கும் இன்பம் பற்று வாழ்கிறானோ, அவனே மக்களிலெல்ாம் மிக்க மகிழ்ச்சியுடைய ஒருவனாவான்.

இற்றைக்காலத்தில், சமூகம் செல்வத்திற்கு ணக்கஞ்செலுத்தி, முழங்காற்படியிட்டுக் க்கிறது. செல்வமானது அதிகாரத்தைத் ருகிறது. அது பொய்யான புகழ்ச்சியையும் வண்டாத புகழ்ச்சியையும் விரும்புகிறது. பான்னை வேண்டி கோடானுகோடி மக்கள் ங்கள் ஆற்றல்களையெல்லாம் செலவழிக்றார்கள்; உயிரையேக்கூட கொடுக்கிறார்கள். மூகம் அறியாமையில் மூழ்கியிருக்கும் காலம் ரையில், ஆணவ ஆதிக்கத்தை விரும்பும் லம் வரையில், மனிதனின் பண்பைக் ணக்கிடாமல் மனிதனின் செல்வத்தைக் ணக்கிடும் காலம் வரையில் மேலே கண்ட வண்டத்தகாத நிலை நீடித்தே தீரும்.

பணக்காரர்களைப் பொறுத்து இரண்டுவிதங் ளில் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அவர்கள் ணத்தை எப்படிச் சம்பாதித்தார்கள்? என் து ஒன்று; அந்தப் பணத்தைக்கொண்டு வர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? என்பது இரண்டு. அதாவது அந்தப் பணம் நாணயமான முறையில் சம்பாதிக்கப்பட்டதா? அந்தப் பணம் மனித சமுதாய நலன்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்விகள் எழும்புகின்றன. இந்தக் கேள்விகளுக்கு நேர்முகமான விடைகள் கிடைக்கப்பெற்றால் அந்தப் பணத்தினால் மனித சமுதாயத்துக்கு நலன் ஏற்படும் என்று கூறலாம். மனிதன் அறிவுடையவனாக மாறும்போது, உள்ளபடியே மனிதனின் மூளை வளர்ச்சியடையும்போது தேவையற்றதை அல்லது நன்கு பயன்படுத்த முடியாததை தேடியலைந்து சேர்க்க முற்படமாட்டான். அப்பொழுது பணத்தைவிட மனிதனின் அன்பு, அறிவு, ஆற்றல் ஆகியவைகளுக்குத்தான் மதிப்பு ஏற்படும்.

தன்னைச் சேர்ந்த மக்கள் உண்ண உணவின்றி உடுக்கஉடையின்றி வாடுவதைக் காண முடியாமல், மகிழ்ச்சியிழந்து மன அமைதியில்லாமல் அறிவுடைய மனிதன் வாழும் காலம் ஒன்று வந்தேதீரும். அப்பொழுது அறிவுடைய மனிதன் தன்னைச் சேர்ந்தவர்கள் அத்துணைப்பேருடைய துன்பங்களையெல்லாம் அகற்றி, அவர்களோடு சேர்ந்து தானும் மகிழ்ச்சியடையும் ஒரு நிலையை எய்த அரும்பாடுபடுவான். ஒவ்வொருவருடைய இதயத்திலும் இரக்கப்பண்பு ஊறியெழும் காலம் ஒன்று வந்தே தீரும். உண்மையை நிலைநாட்டவும், மகிழ்ச்சிக்கான சூழ்நிலைகளைக் காணவும், அந்தச் சூழ்நிலைகளோடு ஒட்டி வாழவும் ஆன நிலைமைகளை ஆர்வத்தோடு ஏற்படுத்திக் கொள்ளும் காலம் ஒன்று வந்தேதீரும். மக்கள் ஒருவரோடொருவர் அன்பு கலந்த அறிவோடு பழகுவதற்கான முறையில், மனித மூளை வளர்ச்சிபெற்று விளங்கும் காலம் ஒன்று வந்தேதீரும்.

மனிதனுடைய உணர்ச்சிகள் அறிவால் அடக்கி ஆளப்படும்போதுதான், பகுத்தறிவு எங்கனும் ஆட்சி செலுத்தும்போதுதான், தொடர்ந்து நடைபெறும் சண்டைகளால் மனிதனின் குருதி கொதிப்பேறாதிருக்கும் போதுதான் மனிதன் நாகரிகம் எய்தியதாகச் சொல்லவேண்டும்.

உலகை நாம் நாகரிகமடையச் செய்யவேண்டுமானால், நாம் குழந்தைகளை அதற்கான முறையில் பயிற்றுவிக்கவேண்டும். குழந்தை தாயின் கரத்தில் தழுவிக்கிடக்கும்போதே, தொட்டிலில் தவழ்ந்து கொண்டிருக்கும் போதே, அதற்குப் பயிற்சிதர முற்படவேண்டும். அப்பொழுதுதான் நல்லதொரு சமுதாயம் எதிர்காலத்தில் உருவாக வழி ஏற்படும். ●

...ண் பிச்சைக்காரர்களோ மகிழ்ச்சியோடு வாழும் மனித சமுதாயத்தைச் சார்ந்தவர்களாகமாட்டார்கள். சமுதாய ஏணியின் அடிப்படியில் இருப்பவன் எப்பொழுது மேலேறுவோமோ என்று ஓயாமல் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறான்; ஆனால் ஏணியின் உச்சியில் இருப்பவனோ எப்பொழுது கீழே வீழ்வோமோ என்று ஓயாமல் அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறான். முன்னவன் பொருள் கேட்கிறான்; பின்னவன் மறுக்கிறான். ஓயாமல் மறுத்து மறுத்து பணக்காரனின் நெஞ்சம் கல்நெஞ்சமாக மாறிவிடுவதோடு மட்டுமல்லாமல், அவன் கை பேராசைகொண்டதாகவும் மாறிவிடுகிறது.

போதுமான அளவு அறிவுடைமையும், போதுமான அளவு உண்மையான பெருந்தன்மையும் கொண்ட ஒருசிலர்தான் நல்ல வாய்ப்பை வாழ்க்கையில் ஏற்படுத்திக்கொள்வதற்கு இலக்குடையவர்களாக இருக்கிறார்கள். வழக்கப்படிப் பார்த்தால் நல்ல வாய்ப்பு அவர்களைப் பற்றிக்கொள்கிறது, நல்ல வாய்ப்பை அவர்கள் தாங்கள் போற்றுவதற்குரிய ஆண்டவனாக மதித்து அடிமைகள்போல் அதற்கு வேலைசெய்து பாடுபடுகிறார்கள். எவனொருவன் நல்ல நேர்மையான தொழிலைச்செய்து, நேர்மையான முறையில் பொருளை ஈட்டி, நேர்மையான முறையில் வாழ்க்கை நடத்தி, வருங்கால வாழ்வுக்கும் சிறிது பொருள் ஒதுக்கித், தன் மக்களை நன்கு பயிலவைத்துத், தான் விரும்பும் ஏனையோரையும் கூடுமானவரையில் காப்பாற்றி, ஈத்துவக்கும் இன்பம் பெற்று வாழ்கிறானோ, அவனே மக்களிலெல்லாம் மிக்க மகிழ்ச்சியுடைய ஒருவனாவான்.

இற்றைக்காலத்தில், சமூகம் செல்வத்திற்கு வணக்கஞ்செலுத்தி, முழங்காற்படியிட்டுக் கிடக்கிறது. செல்வமானது அதிகாரத்தைத் தருகிறது. அது பொய்யான புகழ்ச்சியையும் வேண்டாத புகழ்ச்சியையும் விரும்புகிறது. தன்னை வேண்டி கோடானுகோடி மக்கள் தங்கள் ஆற்றல்களையெல்லாம் செலவழிக்கிறார்கள்; உயிரையேக்கூட கொடுக்கிறார்கள். சமூகம் அறியாமையில் மூழ்கியிருக்கும் காலம் வரையில், ஆணவ ஆதிக்கத்தை விரும்பும் காலம் வரையில், மனிதனின் பண்பைக் ...க்கிடாமல் மனிதனின் செல்வத்தைக் ...க்கிடும் காலம் வரையில் மேலே கண்ட வேண்டத்தகாத நிலை நீடித்தே தீரும்.

பணக்காரர்களைப் பொறுத்து இரண்டுவிதங்களில் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அவர்கள் பணத்தை எப்படிச் சம்பாதித்தார்கள்? என்பது ஒன்று; அந்தப் பணத்தைக்கொண்டு அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? என்பது இரண்டு. அதாவது அந்தப் பணம் நாணயமான முறையில் சம்பாதிக்கப்பட்டதா? அந்தப் பணம் மனித சமுதாய நலன்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்விகள் எழும்புகின்றன. இந்தக் கேள்விகளுக்கு நேர்முகமான விடைகள் கிடைக்கப்பெற்றால் அந்தப் பணத்தினால் மனித சமுதாயத்துக்கு நலன் ஏற்படும் என்று கூறலாம். மனிதன் அறிவுடையவனாக மாறும்போது, உள்ளபடியே மனிதனின் மூளை வளர்ச்சியடையும்போது தேவையற்றதை அல்லது நன்கு பயன்படுத்த முடியாததை தேடியலைந்து சேர்க்க முற்படமாட்டான். அப்பொழுது பணத்தைவிட மனிதனின் அன்பு, அறிவு, ஆற்றல் ஆகியவைகளுக்குத்தான் மதிப்பு ஏற்படும்.

தன்னைச் சேர்ந்த மக்கள் உண்ண உணவின்றி உடுக்கஉடையின்றி வாடுவதைக் காணமுடியாமல், மகிழ்ச்சியிழந்து மன அமைதியில்லாமல் அறிவுடைய மனிதன் வாழும் காலம் ஒன்று வந்தேதீரும். அப்பொழுது அறிவுடைய மனிதன் தன்னைச் சேர்ந்தவர்கள் அத்துணைப்பேருடைய துன்பங்களையெல்லாம் அகற்றி, அவர்களோடு சேர்ந்து தானும் மகிழ்ச்சியடையும் ஒரு நிலையை எய்த அரும்பாடுபடுவான். ஒவ்வொருவருடைய இதயத்திலும் இரக்கப்பண்பு ஊறியெழும் காலம் ஒன்று வந்தே தீரும். உண்மையை நிலைநாட்டவும், மகிழ்ச்சிக்கான சூழ்நிலைகளைக் காணவும், அந்தச் சூழ்நிலைகளோடு ஒட்டி வாழவும் ஆன நிலைமைகளை ஆர்வத்தோடு ஏற்படுத்திக்கொள்ளும் காலம் ஒன்று வந்தேதீரும். மக்கள் ஒருவரோடொருவர் அன்பு கலந்த அறிவோடு பழகுவதற்கான முறையில், மனித மூளை வளர்ச்சிபெற்று விளங்கும் காலம் ஒன்று வந்தேதீரும்.

மனிதனுடைய உணர்ச்சிகள் அறிவால் அடக்கி ஆளப்படும்போதுதான், பகுத்தறிவு எங்கனும் ஆட்சி செலுத்தும்போதுதான், தொடர்ந்து நடைபெறும் சண்டைகளால் மனிதனின் குருதி கொதிப்பேறாதிருக்கும் போதுதான் மனிதன் நாகரிகம் எய்தியதாகச் சொல்லவேண்டும்.

உலகை நாம் நாகரிகமடையச் செய்யவேண்டுமானால், நாம் குழந்தைகளை அதற்கான முறையில் பயிற்றுவிக்கவேண்டும். குழந்தை தாயின் கரத்தில் தழுவிக்கிடக்கும்போதே, தொட்டிலில் தவழ்ந்துகொண்டிருக்கும்போதே, அதற்குப் பயிற்சிதர முற்படவேண்டும். அப்பொழுதுதான் நல்லதொரு சமுதாயம் எதிர்காலத்தில் உருவாக வழி ஏற்படும். ●

காணிக்கை!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

துரோணர் : ஆத்திரமடையாதே, அருச்சுனா! உன்னையன்றி வேறெவருக்கும் இந்த வித்தையை நான் கற்றுத்தரவில்லை! இது தெய்வ சம்மதமான சத்தியம்!

அருச்சுனன் : ஸ்வாமி! நீங்கள் இங்கே சத்தியம் செய்கிறீர்கள். அங்கே எனது நாய் ஏழு அம்புகளை வாயில் தாங்கிக்கொண்டு கிடக்கிறது. 'நீதான் எனது பிரதம சீடன், உன்னைவிட வில்வித்தையில் சிறந்தவர்கள் வேறு யாரும் கிடையாது' என்று நீங்கள் சொல்லியதை ஏளனம் செய்வது போல, நாய் அங்கே கிடக்கிறது, ஏழு அம்புகளைத் தாங்கிக்கொண்டு!

துரோ : எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது! நான் சொன்ன வாக்குப் போகாது. நீதான் என்னுடைய பிரதம சீடன் உன்னைத்தவிர வேறெவரும் வில்லில் சிறந்தவர்களாக இல்லை. இனி இல்லாமலும் செய்கிறேன்; வா! அந்த வில் வீரன் யாரென்று பார்த்து, ஒரு முடிவுகாண்கிறேன்!

(போகிறார்கள். திரை விழுகிறது.)

நான்காவது காட்சி

(காட்டு மத்தியில் அடர்ந்த இடம். ஒரு ஓலை வேய்ந்த சிறு குடில். வெளியில் துரோணரின் சிலை. ஏகலைவன் வில்லைப்பிடித்து நாண் ஏற்றித், தட்டிப் பார்க்கிறான். அவனுடைய நண்பன் வனதத்தன் வருகிறான்.)

வன : என்ன, ஏகலைவா! வெள்ளி முளைக்கு முன் உன் மாளிகைக்கு வந்தேன். நீ அதற்குள் வெளியே போய்விட்டாய் என்றார்கள். எங்கே போயிருந்தாய், அதிகாலையில்?

ஏக : வேட்டைக்குப் போயிருந்தேன்.

வன : வேடிக்கை செய்யாதே! இருட்டு நேர
தில் வேட்டையாடவா?

ஏக : ஆமாம், இருட்டு நேரத்தில்தான்! ஏ
போகக்கூடாதா? அதோ, போய் பா
வேங்கைப் புலியும், புள்ளி மானும், க
யும், காட்டெருமையும் கிடக்கின்ற
என் அம்புபட்டு! இருட்டில் நான் வே
டைக்குச் சென்றதில் விழுந்தவை அ

வன : இருட்டில் கண்தெரியாதே! எப்
உன்னால் வேட்டையாட முடிந்தது? ந
தடுமாறும் அந்த இருட்டில்தான், வே
கையும், சிங்கமும் கூரிய பார்வையுட
உலவும். எனவே வேட்டையாடச் செ
வது ஆபத்தும்கூட! குருடன்போ
நாம் போகும்பொழுது அவை எங்கிருந்
பாயுமோ, சொல்லமுடியாது! பகல் நே
திலேயே இந்த அடர்ந்தகாட்டில் வெ
சம் இருப்பதில்லை. அதிலும் இரவு நே
தில், கண் தெரியாத இருண்ட பொழு
நீ எப்படி வேட்டையாடி வருகிறாய்?

ஏக : வேட்டையாடுவதற்கு இரவு, பகல் எ
வாயினும் சரியே! சத்தம் வருகிறதை
பொறுத்து, அம்பு வேகமாகப் பாய்
செல்லுகிறது, இதுவரை வைத்த கு
தப்பியதில்லை. கண்ணைக்கட்டி, நடுக்கா
டில் கொண்டுபோய்விட்டாலும், என்
வேட்டையாடமுடியும். காரணம், வி
பிடித்தவனுக்குக் கண் அவனுடை
கட்டைவிரலில் இருக்கிறது.

வன : நண்பா! வில்லில் உனக்குள்ள தேர்
கண்டு, எவரும் ஆச்சரியப்படுவார்க
இவ்வளவு சிறந்த வில் வீரனாக நீ ஆ
விட்டாய், ஆனால் அன்று, அந்
துரோணாச்சாரியார் உன்னைச் சீடனு
ஏற்றுக்கொள்ள மறுத்தாரல்லவா?

ஏக : அவர் மறுத்தார், நான் மறுக்க
லையே! அவருடைய சீடனாக நான் அ
இல்லை, ஆனால் என்னுடைய குருவ
அவர் இங்கு இருக்கிறார்! அதோ

(சிலையைக் காட்டி) அவர் முன்னிலையில் தான் நான் வில்வித்தை பயில்கிறேன்!

வன: அவர் உன்னை ஏறெடுத்தும் பார்க்க வில்லை, நீதான் அவர் சிலையை வைத்துக் கொண்டு, 'குருவே,' 'குருவே!' என்று துதிபாடுகிறாய்!

ஏக: எனக்கும் ஒரு குரு வேண்டுமென்பதற்காக, வில்வித்தையில் எனக்குள்ள மதிப்பைக் காட்டுவதற்காக! என்றைக்காவது ஒருநாள், அவர் என் வில்வித்தையைக் கண்டு, ஏற்றுக்கொள்ளாமலிருக்கமாட்டார்!

வன: உம்! எனக்கு அந்த நம்பிக்கை இல்லை! அவருடைய குருகுலத்தைத் தேடி நாம் சென்றபொழுதே அலட்சியப்படுத்திவிட்டார்!

ஏக: வேடன் ஏகலைவனை அலட்சியப்படுத்தினார்கள், வில்வீரன் ஏகலைவனை அவர்கள் அலட்சியப்படுத்த முடியாது!

வன: நான் அருவிவரைப் போய்வருகிறேன். (போகிறான்.)

(ஏகலைவன் மலர்மாலை யொன்றை யெடுத்துச் சிலைக்குச் சூட்டுகிறான். மறைந்திருந்து, அருச்சுனனும் துரோணரும் வெளிவருகிறார்கள்.)

அரு: குருவே! இவன்—ஒரு வேடர்குலத் தரசனின் மகன்—முன்பு நமது குருகுலத்தில் சேரவந்து விரட்டப்பட்டானே ஏகலைவன் என்பவன், அவன்தான்! விற்கூடம் அமைத்து, உங்கள் சிலையை வைத்து ஏதோ வில் பிடித்து வேடிக்கை செய்கிறான்!

துரோ: நீ அப்படி ஒதுங்கியிரு! நான் பார்த்து வருகிறேன்! அவன் எவ்வளவு வித்தைகள் கற்றிருந்தாலும் அதற்கு முடிவுநாள் இதுதான்!

(அருச்சுனன் மறைகிறான். துரோணர்மட்டும் வருகிறார். சிலைமுன் வணங்கி நிற்கும் ஏகலைவன் திரும்புகிறான். துரோணச்சாரியார் நிற்பதைப் பார்த்து ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தவனாய், அவர் கால்லடியில் வீழ்ந்து வணங்கி எழுகிறான்.)

ஏக: குருவே! தங்கள் வரவால் தன்யனானேன்!

துரோ: யாரப்பா நீ? காட்டுவழியில் என் காலடியில் வீழ்ந்து, 'குருவே' என்று அர்ச்சிப்பது!

ஏக: ஸ்வாமி! நான் வேடர்குலத்தரசர் ஹிரண்யதனுசின் குமாரன் ஏகலைவன்! முன்பொருதடவை வில்வித்தை பயில தங்கள் குருகுலம் வந்தேன்.

துரோ: ஆமாம், ஞாபகம் வருகிறது! அப்பொழுது பார்த்ததற்கு இப்பொழுது ரொம்ப மாறியிருக்கிறாய்!

ஏக: தங்களுடைய குருகுலத்தில் சேர்ந்து, தங்களுடைய பார்வையில் வில்வித்தையைக் கற்றுக்கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிட்டாமறபோயிற்று! இருந்தாலும் உங்களைப்போன்ற சிலையமைத்து, அதையேக் குருவாகப் பாவித்து, வில்வித்தையைப் பழகிவருகிறேன்!

துரோ: வேறு யாரும் உனக்குக் குருவாகக் கிடைக்கவில்லையா?

ஏக: கிடைத்திருப்பார்கள், ஆனால் உங்களைத் தவிர, வேறுயாரையும் நான் குருவாக ஏற்றுக்கொள்ளவில்லை!

துரோ: குரு இல்லாமல். நீயாக எல்லாம் கற்றுக்கொண்டாயோ? சப்தாஸ்திர வித்தை உனக்கு எப்படித் தெரிந்தது?

ஏக: அப்படியென்றால் என்ன?

துரோ: ஏழு அம்புகளை ஒரே கொத்தாக விடுவது.

ஏக: பெயர் புரியவில்லை. ஆனால் அந்த வித்தையை நானாகக் கற்றுக்கொண்டேன். ஒரு அம்பிலிருந்து இரண்டு, மூன்று, நான்கு என்று ஏழு அம்புகள் வரை ஒரே சமயத்தில் விடுவதற்குப் பழகினேன். எட்டு அமபுகள் விடுவது என்று பழகிக்கொண்டிருக்கிறேன்.

துரோ: எட்டு அம்புகளா? (மறுபக்கம் திரும்பி) எனக்குக்கூடத் தெரியாதே! (மீண்டும் ஏகலைவனைப் பார்த்து) வில்வித்தையில் உனக்கு நல்ல ஞானம் வந்திருக்கிறது!

ஏக: வில்வித்தைக்கே அதிகாரியாக இருக்கும் தாங்கள் அவ்வாறு சொல்வது கேட்டு தன்யனானேன்! இவ்வளவுநாள் பாடுபட்டதற்குப் பலன் என்று பெருமகிழ்ச்சியடைகிறேன்!

துரோ : ஞானம் வெறுமனே வரவில்லை! அந்தச் சிலையை வைத்துப் பூஜித்திருக்கிறாய்! என்னிடம் வந்தபொழுது "உனக்கு வில்வித்தை நன்றாக வரும்" என்று ஆசீர்வதித்தேனே இல்லியோ, அப்படியே வில்வித்தை உனக்கு வந்தது! பெரியவாள் ஆசீர்வாதம் பலிக்காமற் போகாது!

ஏக : தங்களுடைய ஆசீர்வாதம் நிச்சயம் பலித்தது, குருவே! இதுவரைத் தங்களுடைய சிலையை வைத்து பூஜித்துவந்தேன், இன்று நேரிலேயே தங்களைப் பூஜிக்கும் பாக்கியம் இந்த ஏழைக்குக் கிடைத்துள்ளது! வாருங்கள்! பக்கத்தில் தான் எங்களுடைய அரண்மனை உள்ளது. என்னுடைய தந்தையும் தங்களை வரவேற்று உபசரிப்பார். தங்கள் பாத தூளிபட்டு எங்களுடைய அரண்மனை புனிதமடையும்!

துரோ : அங்கே நான் வருவது அவசியமில்லை. உம்! என்னுடைய குருகுலத்தில் பல அரசகுமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய அரண்மனைக்குச் சென்றால், காணிக்கைகள் ஏராளமாக வைத்து வரவேற்பார்கள்.

ஏக : ஸ்வாமி! அதைவிட அதிகமான அளவு, இதுவரை நீங்கள் கண்டிராத அளவுக் காணிக்கையைக் குவித்துவைத்து நாங்கள் வரவேற்கிறோம்!

துரோ : அவர்கள் காணிக்கைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். என்னுடைய குருகுலத்தில் வசிக்கிறார்கள், என்னுடைய சீடர்களாக இருக்கிறார்கள்! நீ ஏன் காணிக்கை தரவேண்டும்! நான்தான் ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்?

ஏக : தங்களுடைய குருகுலத்தில் நான் இல்லாவிட்டாலும், தங்களைக் குருவாகப் பாவித்தே நான் வில்வித்தை பழகினேன். எனவே குருவுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கையைத் தங்களிடம் செலுத்த நான் கடமைப்பட்டவன்.

துரோ : ஏகலைவா! உன் குணத்தை மெச்சினேன். என் மாணாக்கர்களா இருப்பவர்களேக் கற்றுத் தேர்ந்ததும் தாங்கள் வாக்களித்த காணிக்கையைத் தருவதற்குத் தயங்குவார்கள். முன்பு துருபதன் என்பவன் என்னிடம் மாணவனாக இருந்த பொழுது, தான் அரசனானதும் தனது இராஜ்ஜியத்தில் பாதி தருவதாக சொன்னான். பின் அவன் அரசனானது[ம்] நான் அவனிடம் போய்க் கேட்டே[ன்] பாதி ராஜ்யத்தை அல்ல, என் குழந்தை[க்]குப் பால்தர ஒரு பசுவை! அதைக்கூட தராமல் அவன் அவமானப்படுத்[தி] என்னை அனுப்பிவிட்டான்.

ஏக : குருவே! யார் அந்தத் துருபதன்[?] உங்களை அவமானப்படுத்திய அவன் எ[ங்கு] இருக்கிறான்? நீங்கள் கேட்டால், அவ[ன்] பாதி இராஜ்யமென்ன, முழு இராஜ்ய[த்]தையும் வென்று உங்கள்முன் வை[க்]கிறேன். ஒரு பசுவென்ன, பெரிய ப[சு]மந்தையே வேண்டுமானாலும் அனுப்[பு]கிறேன். எது வேண்டுமானாலும் கேளு[ங்]கள்! நிச்சயமாக இந்த ஏகலைவன் சமர்ப்பிப்பான்!

துரோ : ஏகலைவா! உன் குருபக்தியை நா[ம்] மெச்சினோம்! ஆனால் இப்படி ஆர்ப்பா[ட்]டத்துடன் பேசாதே! 'காணிக்கை கேளுங்கள்!' என்று கெஞ்சுகிறாய்; பி[ன்] கேட்டுவிட்டால், கொடுக்கமுடியாம[ல்] கையைப் பிசைந்துகொண்டு கண்ணீ[ர்] விடுப்பாய்?

ஏக : துருபதன் போன்றவர்கள் நாடாளு[ம்] மன்னர்கள், சூதுவாது தெரிந்தவர்கள்[.] நாங்கள் அத்தகைய நன்றிகெட்ட மனித[ர்]கள் வாழும் நாட்டைவிட்டு விலகி, கா[ட்]டில் ஒதுங்கி வாழ்பவர்கள். என் வி[ல்] குறிதவறிய அம்பை எய்யாது; என்வா[ய்] தவறிப்போகும் சொல்லை வெளியிடாது[.]

துரோ : காணிக்கை கேட்கச் சொல்லுகிறா[ய்] கேட்டால்...

ஏக : நிச்சயமாக நான் சமர்ப்பிப்பேன்.

துரோ : எதைக்கேட்டாலும்...?

ஏக : எதைக்கேட்டாலும் தருவேன். அ[து] ஏழ்கடல் அப்பாலிருந்தாலும், இமய[த்]தின் உச்சியிலிருந்தாலும், இந்திராபுரி[யி]லிருந்தாலும், எமன் பட்டணத்திலிரு[ந்]தாலும் தாங்கள் கேட்பதைக் கொண்[டு] வருவேன்! எனது வீரத்திற்கு அ[தை] ஒரு வாய்ப்பாக ஆக்கிக்கொள்வே[ன்] தயங்காமல் கட்டளையிடுங்கள்!

துரோ : கேட்டபின் மறுக்கமாட்டாயே?

ஏக : ஸ்வாமி! ஏன் திரும்பத் திரும்பக் கே[ட்]கிறீர்கள்? துளியும் சந்தேகம் வேண்டா[ம்]

துரோ : இல்லை; அவசரப்பட்டு சொல்லி விடாதே! பின் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவேண்டும்! குரு தட்சிணை யென்று சொல்லிவிட்டுப் பின் தவறினால், எவ்வளவு நரகம் சம்பவிக்கும் தெரியுமோ?

ஏக : அந்தப் பயமே வேண்டியதில்லை. குரு கேட்டதை ஏகலைவன் தந்தான் என்று தான் சொல்லப்படுமே தவிர, மறுத்தான் என்ற பழிச்சொல் நிச்சயமாக வராது! எதை வேண்டுமானாலும் கேளுங்கள்!

துரோ : எதைக் கேட்பது! உன்னுடைய குரு பக்தியைக் காட்டுவதாக இருக்கவேண்டும்! உம்...என்ன கேட்கலாம்?

ஏக : கேளுங்கள், ஸ்வாமி! எனது குருபக்தி உண்மையானது, உயர்ந்தது, உறுதியானதுங்கூட! கேட்பது எத்தகையகாணிக்கையாயினும் செலுத்தத் தயங்கேன்!

துரோ : வேண்டாம், ஏகலைவா! என்னைத் தொந்தரவு செய்யாதே! கேட்டுவிட்டால், பின் உன்னால் முடியாது என்று பாவத்தைச் சேர்த்துக்கொள்வாய், நல்லவர்களின் சாபத்துக்கு ஆளாவாய்! ஏதோ மரியாதைக்கு உபசார வார்த்தைகள் வழங்கினாய்! அத்துடன் போய்விடு! என் உள்ளத்தைக் கிளறிவிட்டால், என்னை மேலும் தூண்டினால், நான் கோரும் காணிக்கையை நீ காதுகொடுத்துக் கேட்கக்கூட கூசுவாய்!

ஏக : குருவே! இன்னும் என்னை நீங்கள் நம்பவில்லையே! நான் பிடித்துள்ள இந்த வில்லின்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! தாங்கள் கோரும் காணிக்கை நிச்சயமாக கிடைக்கும்.

துரோ : குருபக்தி, காணிக்கை, வில்மீது ஆணை என்றெல்லாம் கொட்டியளக்கிறாயே! சரி! இதோ கேட்கிறேன் எனக்குக் காணிக்கையாக உனது வலதுகைக் கட்டைவிரல் வேண்டும்! எங்கே, அறுத்துக்கொடு பார்க்கலாம்!

ஏக : என்ன கேட்கிறீர்கள், ஸ்வாமி!

துரோ : வலதுகைக் கட்டைவிரல்! பார்த்தாயா, இப்பொழுது திகைக்கிறாய்? வில்வித்தைக்குத் தேவையான இந்தக் கட்டைவிரலை எப்படி இழப்பது என்று பதைக்கிறாய்? எவ்வளவு ஆணவத்துடன், ஆடம்பரத்துடன் பேசினாய்! இப்பொழுது கட்டைவிரலையா காணிக்கையாகத் தருவது என்று வேதனைப்படுகிறாய்!

ஏக : அப்படியல்ல, குருவே! காணிக்கை என்னவென்று குறிப்பிடாமல், நீங்கள் நீண்டநேரம் தயங்கியதும், நானும் சிறிது அஞ்சினேன், எங்கு அது இருக்கிறதோ, அதை தர, என் வாக்கை நிறைவேற்ற எவ்வளவுநாள் பிடிக்குமோ என்று நினைத்தேன். அந்த அச்சம் நீங்கிவிட்டது. வலதுகை கட்டைவிரல்! அதை இப்பொழுதே கொடுத்துவிடலாம்! வெகு சுலபத்தில், வெகு சீக்கிரத்தில் காணிக்கையைத் தந்து, என் வாக்கைக் காப்பாற்ற முடிகிறதே என்று மகிழ்வடைகிறனே!

துரோ : என்ன, ஏகலைவா!

ஏக : ஏன், ஸ்வாமி! அவ்வாறு திகைப்புடன் என்னைப் பார்க்கிறீர்கள்? தாங்கள் கேட்ட காணிக்கையை இதோ! தருகிறேன்! எங்கே எனது வாளைக் காணோம்? வனதத்தா! வனதத்தா!

(வனதத்தன் வருகிறான். வத்தவன் துரோணரை ஏற இறங்கப் பார்க்கிறான்.)

வன : இவர் யார்?

ஏக : இவர்தான் துரோணர்!

வன : அன்று உன்னை ஏற்றுக்கொள்ளமுடியாதென்று சொல்லி அலட்சியப்படுத்தி அனுப்பினரே அவரா? இன்று நம்மிடம் அகப்பட்டுக்கொண்டாரா?

ஏக : அப்படிச் சொல்லாதே! அவர் என் குரு! அவர் இந்த விற்கூடத்துக்கு வந்ததே பெரியதொரு சம்பவமாகும்! அவருக்கு எனது காணிக்கையைச் செலுத்தப்போகிறேன்!

வன : அன்று உன்னை விரட்டியனுப்பிவிட்டு, இப்பொழுது காணிக்கை கேட்க வந்துவிட்டாரா இந்த தர்மவான்! ஏனய்யா, நானுந்தான் கேட்கிறேன். உங்கள் குருகுலத்தில் எங்கள் வேடர்குலத்தவர் நுழையக்கூடாது என்று கொக்கரித்தீர்களாமே! ஏதோ காட்டுமிராண்டி, சூத்திரன் என்றெல்லாம் பழித்தீர்களாமே! இப்பொழுது ஏன் இந்தக் காட்டுக்குள் வந்தீர்கள்? நாங்கள் காட்டுமிராண்டிகள் என்பது உண்மையானால், காட்டு மிருகங்

களை வேட்டையாடுவதுபோலல்லவா வேட்டையாடித் தீர்த்திருப்போம்!

துரோ : ஏகலைவா! யார் இந்தப் போக்கிரி? பெரியவாளைப்பார்த்து இப்படிப் பேசுகிறான்!

வன : பெரியவாள்! யானைக்குப் பிறந்தவரோ? காட்டிலே திரிகிற பெரிய யானையைக் கண்டாலே, நமக்குப் பயம் தோன்றுவதில்லை! இவர் நம்மை மிரட்டுகிறார்!

ஏக : வனதத்தா, பேசாமலிரு! சீக்கிரம் காணிக்கை தரவேண்டும். அந்த உடைவாளை இப்படிக் கொடு! என்னால் முடியாது போலிருக்கிறது! நண்பா! எனக்குச் சற்று உதவிசெய்! இதை வெட்டித் தா! குரு காத்துக்கொண்டிருப்பார்!

வன : (ஒன்றும் புரியாமல்) எதை வெட்டுவது? என்ன காணிக்கை அது? உன் கையில் ஒன்றையும் காணோமே!

ஏக : இந்தக் கட்டைவிரலைத்தான்!

வன : (திடுக்கிட்டு) கட்டைவிரலையா? அதை வெட்டிக் காணிக்கையாக்குவதா?

ஏக : ஆமாம்! எனது வலதுகை கட்டைவிரலை என் குருவுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்போகிறேன்!

வன : உனக்கு ஏதாவது பித்துப் பிடித்துவிட்டதோ, அல்லது சித்தம் கலங்கிவிட்டதோ? கட்டைவிரலை வெட்டித் தருவதால், என்ன பலன்? காணிக்கை என்றால் கட்டை விரலை வெட்டித் தருவதுதான் முறையா? வந்தவருக்கு மரியாதை செய்வதென்றால், நல்ல அகிலும், நறுமணங் கமழும் சந்தனமும், யானைத் தந்தமும், மான் கொம்பும், பொன்னும், மணியும் நம் காட்டிலே கிடைக்கும் பிற பொருள்களை வைத்துத் தருவதுதான் முறை! கட்டை விரலைத் தருவதால் அவருக்குத் தான் என்ன பலன்? எனக்கு ஒன்றும் புரியவில்லை, நீ ஏன் அதை காணிக்கையாக்க வேண்டுமென நினைத்தாய்? அவர்தான் அதை ஏற்றுக்கொள்வாரா?

ஏக : குருவின் விருப்பப்படி, எனது கட்டைவிரலைக் காணிக்கையாக்குவதாகச் சொல்லிவிட்டேன்! அதை நான் மாற்றப்போவதில்லை!

வன : நண்பா! வேடிக்கை பேசுகிறாயா
சற்றுமுன் நீதானே வில்வீரனுக்குக்க
அவனுடைய கட்டைவிரலில் இருக்கி
தென்று சொன்னாய்? அப்படியிருக்க
கட்டைவிரலை இழந்துவிட்டால், வில்லை
பிடிக்கமுடியுமா? அம்பை விடமுடியுமா
கண்ணையிழந்து ஓவியம் வாங்குவ
போல், உன் கட்டைவிரலைத் தந்து வி
வித்தையை கற்றுக்கொள்ளப் போ
றாயா? (துரோணரைப்பார்த்து) கட்டை
விரலைக் காணிக்கையாக நீங்கள்தா
ஏன், கேட்கிறீர்கள்!

துரோ : நானாகக் கேட்கவில்லை! காட்டி
வந்தபொழுது. என் காலடியில் வீழ்ந்
'குருவே! என் காணிக்கையைப் பெ
றுத்தான் போகவேண்டும்' என்று பி
வாதம் செய்தான். எதைக் கேட்டாலு
காணிக்கையாகத் தருவதாகக் கூறி
தான். சரியென்று கட்டை விரலைத்
என்றேன், இவனது உறுதியை
பரிட்சிக்க, இவனது குருபக்தியை
சோதிக்க!

வன : மிகப்- பயங்கரப் பரீட்சையாக இரு
கிறதே! ஏகலைவனது குருபக்தியை
சோதிக்க வேறு வழிகள் கிடையாத
அவன் வில்வீரன், நீங்கள் தரும் கட்ட
அவனுடைய வில்வித்தையை அளவிடு
தாக இருக்கவேண்டும். அந்தக் கட
ளையை நிறைவேற்றுவதால், குருபக்
யும் விளங்கும், வீரமும் சிறப்புறு
வேழத்தை ஒரு அம்பினாலே பிளந்துவ
வேங்கைப்புலியின் பல்லை எடுத்து
காட்டு, விதர்ப்பநாட்டு அரசனை வி
போரில் வென்று காட்டு! அவந்தி தே
தனை இழுத்துவா! விற்போரில் உ
னுக்கு எதிராக எவன் நிற்கிறா
அவன்முன் உங்கள் மாணவன் ஏகலைவ
நிறுத்துங்கள்! கடைசி மூச்சுவ
கடைசி அம்புவரை, தனக்குத் தெரி
கடைசி வில்வித்தைவரை ஏகலைவ
போராடுவான், வெற்றியும் காண்பா
தங்கள் மாணவனின் வெற்றியா
உங்கள் புகழும் உயரும்! குருபக்தியி
உயர்வும் தெரியும்! ஆனால் நீங்
போடும் சோதனை ஏகலைவன் ஒரு
வீரன் என்பதை அழிப்பதாகவல்லவோ
இருக்கிறது!

(அடுத்த இதழில் முடிவுறும்)

விணவும் விளக்கமும்

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தோர் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று கூறுவதன் பொருள் என்ன ?

ஒன்றே குலம் என்று கூறுவது மனித குலத்தை; ஒருவனே தேவன் என்று கூறுவது அறிவை.

திராவிட முன்னேற்றக்கழகம் அறிவியல் அடிப்படையில் அமைந்த பகுத்தறிவு நெறியினைக் கடைப்பிடிப்பதாகும். பகுத்தறிவு நெறியில் நின்று பார்க்கும்போது, மனிதகுலம் பிறப்பின் காரணமாக ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்பட்டு பல்வேறு பிளவுபட்ட நிலைகளையுடைய பிரிவுகளாகப் பிரிக்கப்படாமல், பிறப்பைப்பொறுத்து மக்கட் சமுதாயம் ஒருகுலமாக மதிக்கப்படவேண்டும் என்றும், மனித சமுதாயம் தனக்கு வழிகாட்டியாகப் போற்றி ஏற்றுக்கொள்வதற்கு உரிய ஒன்ருக அறிவைக் கொள்ளவேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக்கழகம் கூறுகிறது.

தொழில்—மொழி—நாடு—கண்டம் இன்னபிற காரணமாக மக்கள் பல்வேறு வகையினராக உலகில் பிரிந்து காணப்படவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டாலும், ஒரு ஏதுவின்கீழ்க் கூடும் மக்கள், பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுப் பிரிவுகளுக்கு இடங்கொடுக்காமல் ஒருகுலமாக அதாவது ஒரே மக்கட்தொகுப்பாக அமையவேண்டும் என்பதைத்தான் கழகம் வற்புறுத்துகிறது. மக்கள், தொழில்—மொழி—நாடு—கண்டம் முதலியன காரணமாகப் பிரிவதற்கு ஏதுக்கள் உண்டு என்ருலும், ஒரு ஏதுவின்கீழ்க் கூடும் மக்கள் பிறப்பின் காரணமாக ஏற்றத்தாழ்வுகள் கற்பித்துக்கொண்டு பல்வேறு பிரிவினராகப் பிரிந்து நிற்கவேண்டிய இன்றியமையாமையில்லை. எனவேதான் 'ஒன்றேகுலம்' என்ற கொள்கை வலியுறுத்தப்படுகிறது.

'அறிவு' என்று சொல்லும்போது 'நல்லறிவு' என்பதைத்தான் குறிப்பிடுகிறேம். "சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ, நன்றின்பால் உய்ப்ப தறிவு" (மனத்தை அது சென்ற இடத்தின்கண் எல்லாம் செல்லவிடாது அவ்விடத்தின்கண்ணுள்ள நன்மை தீமைகளை ஆராய்ந்து, தீயவற்றின்கண் செலுத்தாமல் நல்லவற்றின்கண் செலுத்துவது அறிவு) என்று வள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ள அறிவைத்தான் நாம் அறிவு என்று சொல்லுகிறேம். போற்றி வழிபடுதற்குரிய அதாவது போற்றி ஏற்றுக்கொள்ளுதற்குரிய ஒரு பொருள்தான் 'கடவுள்' என்னும்போது நாம் அறிவைத்தான் அத்தகைய கடவுள் என்கிறேம். 'அறிவே கடவுள்' என்பதை ஏறத்தாழ எல்லா சமயத்தவர்களும் ஒப்புக்கொள்ளவே செய்திருக்கின்றனர். ஆனால் பெரும்பாலான சமயத்தவர்கள் அந்த அளவிலே நிற்காமல், வேறு எதை எதையோ, பொருத்தமில்லா பலவற்றைக் 'கடவுளோ'டு அதாவது போற்றி ஏற்றுக்கொள்ளுவதற்குரிய ஒன்ருேடு ஈடுபடுத்திக்கொள்கின்றனர். ஆனால் நாம் 'அறிவே கடவுள்' என்ற அளவோடு நிற்கிறேம், ஏனையவற்றை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேம். "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று தாயுமானவர் கூறுவதும், "ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று சொல்லி அலையும் அறிவிலிகாள் அறிவொன்றே தெய்வமாவதை அறியீரோ" என்னும் கருத்துப்பட பாரதியார் கூறுவதும், "நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்" என்று சித்தர் கூறுவதும் நமது கருத்துக்கு ஒத்து வருவனவாகும். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று தொல்காப்பியர் கூறுவதும் நமது கருத்துக்கு வலியூட்டுவதாகும். உயர்ந்தோர் என்பவர்கள் நல்லறிவாற் சிறந்தவர்கள் என்று கொள்ளப்படும். நல்லறிவாற் சிறந்தவர்கள் காட்டும் நெறிமுறையே உலக மக்கள் இனிது உய்வதற்கு ஏற்ற வழியாகும். உலக மக்கள் போற்றி ஏற்றுக்கொள்வதற்குரிய நெறிமுறையை உயர்ந்தோரின் நல்லறிவுதான் தருகிறது. எனவேதான் நல்லறிவு போற்றி ஏற்றுக்கொள்வதற்குரிய ஒன்று என்கிறேம். அப்படிப்பட்ட நல்லறிவைப் போற்றி ஏற்றுக்கொள்வதால், உருவான பலன்களை உலகியல் சமுதாய வாழ்வில் காண்கிறேம். எனவேதான் அத்தகைய அறிவைப் போற்றும் அளவில் நின்று

ஆச்சாரியார் வெளியிட்டார். முரண்பட்ட கருத்துக்களை அடுத்தடுத்துக் கூறுவதில் அன்பர் ஆச்சாரியாருக்கு ஈடு இணை வேறு யாரும் இருக்கமுடியாது முக்கியமானவர்கள் அடங்கிய அரசியல் வட்டாரத்தில் என்றே கூறிவிடலாம். அவர் ஓரிடத்தில் ஒரு கருத்தைக் கூறுவார்; அடுத்து வேறோர் இடத்தில் அதற்கு நேர் முரண்பட்ட கருத்தை வெளியிடுவார். முதலில் பாக்கிஸ்தான் பிரிவினை கூடாது என்று பேசினார்; அவரே பிற்பாடு பாக்கிஸ்தானைப் பிரித்துக் கொடுத்துவிடலாம் என்று பேசினார். ஓரிடத்தில் கம்யூனிஸ்டுகள் தமது முதல் நம்பர் எதிரிகள் என்பார்; வேறோர் இடத்தில் 'திராவிட இயக்கத்தார் தமது முதல் நம்பர் எதிரிகள் என்பார். ஓரிடத்தில் பெரியார் நல்லவர் தமது நண்பர் என்பார்; மற்றோர் இடத்தில் பெரியார் கொடியவர் தமது எதிரி என்பார். இப்படிப்பட்ட இயல்பைக் கொண்ட அன்பர் ஆச்சாரியார்தான் மேற்கண்ட கூற்றைக் கூறியுள்ளார். சாதிகள் நாட்டிற்கு அவசியமில்லை என்று பல இடங்களில் பேசிய அவரேதான் சாதிகள் நாட்டிற்குத் தேவை என்பதுபோல் பேசியிருக்கிறார்.

அன்பர் ஆச்சாரியார் எதற்கெடுத்தாலும் உவமை சொல்லி அதன்மூலம் பொருள் விளக்கம் செய்யும் பண்பு படைத்தவர். அவர் கூறும் உவமைகள் மக்களை மயக்கும்: ஆனால் அவற்றில் பெரும்பாலானவை அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தி வருவதில்லை. சராசரி மனிதனுக்குக் கீழான அறிவுத்திறனைப் படைத்தவர்கள் அவருடைய உவமைகளை அப்படியே பொருத்தமானவை என்று ஏற்றுக்கொள்ளவே செய்வர். அவ்வளவு சூழ்ச்சித் திறனை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் அவரது உவமான உவமேயங்கள். மேற்கண்ட கூற்றிலும் அப்படிப்பட்ட சூழ்ச்சித்திறன்தான் உள் பொதிந்துகிடக்கின்றது.

மலர்த்தோட்டத்தில் பலவிதமான மலர்கள் இருப்பது அழகாகத்தான் இருக்கும். அதுபோல நாட்டில் பலவித சாதிகள் இருப்பது அழகாக இருக்கும் என்று அன்பர் ஆச்சாரியார் கூறியுள்ளார். நாம் பார்வையாளராக இருந்து பலவித மலர்களைப் பார்க்கும்போது ஏற்படும் அழகு, அதுபோலவே நாமும் பார்வையாளராக இருந்து பலவித சாதிகளை நாட்டில் காணும்போதல்லவா ஏற்படும்? நாம் பார்வையாளராக இல்லையே! ஆச்சாரியார் உள்பட அனைவரும் இந்நாட்டில் பல்வேறு சாதிகளாக அல்லவா கிடக்கிறோம்! ஆச்சாரியார் வேண்டுமானால் அகமகிழும் சாதியைச் சேர்ந்தவர் என்று கூறலாம்; ஆனால் பெரும்பாலோர் அல்லற்படும் சாதிகளைச் சேர்ந்தவர்களாக அல்லவா இருக்கிறார்கள்- அவர்கள் சாதிகளைப், பூக்களைப்போல கண்டுகொண்டிருக்கும் பார்வையாளராக இல்லையே! தாம் அல்லற்படுவதற்குக் காரணம் தம்மைப் பிரித்து வைத்துக்கொண்டிருக்கும் சாதிமுறைதான் என்று கோடானுகோடிபேர் எண்ணி, அந்தக் கொடிய முறையினின்றும் விடுபட கதறிக் கொண்டிருக்கும்போது, சாதிகள் இருப்பது நாட்டிற்கு அழகுதரும் என்று பேசுகின்றார் என்றால், ஆச்சாரியாரின் கூற்றில் எவ்வளவு நஞ்சு கலந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

மலர்களை சாதிகளுக்கும், பார்வையாளரை மக்களுக்கும் உவமையாக்கியிருப்பது உண்மை நிலைக்குப் பொருந்திவராததாகும். மலர்களையே சாதிகளுக்கு உவமையாக்கினார் என்று வைத்துக்கொண்டாலும், மலர்கள் ஒன்றிற்கொன்று தொடர்பில்லாமல், ஒன்றிற்கொன்று ஏற்றத்தாழ்வு கற்பித்துக்கொள்ளாமல், ஒன்றையொன்று தாழ்த்தி உயராமல் அல்லவா இருக்கின்றன. ஆனால் சாதிகள் அப்படியா இருக்கின்றன? ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் கற்பித்துக்கொண்டு ஒன்றையொன்று கொடுமைப்படுத்திக்கொண்டல்லவா இருக்கின்றன! மலர்களைச் சாதிகளுக்கு உவமையாக்குவது எப்படிப் பொருத்தமுடையதாகும்?

அழகான கருத்து என்று சொல்லக்கூடிய அளவில் மயக்கந்தரும் ஒரு உவமையைச் சொல்லி, மக்களின் உள்ளத்தை நெகிழவைத்துப், பிறகு பொருத்தமற்ற ஒரு உவமேயத்தை ஈடுபடுத்தி அதன் கருத்தை மறைமுகமாக நிலைநாட்டப் பார்க்கிறார் என்பதுதான் மேலே கண்ட கூற்றில் பெறப்படும் உண்மையாகும்.

பலவித மலர்கள் இருப்பது தோட்டத்திற்கு அழகாகத்தானிருக்கும்; ஆனால் பலவித சாதிகள் இருப்பது நாட்டிற்கு அழகாக இருக்காது; வேதனை தருவதாகத்தான் இருக்கும் என்பதைத்தான், நாம் அன்பர் ஆச்சாரியாருக்குக் காணிக்கை ஆக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

கைதுசெய்தால் வழக்காடக்கூடாது, சாமீனில் வரக்கூடாது என்றிருந்த தி. மு. கழகத்தின் தீர்மானம் என்னவாயிற்று?

ஆச்சாரியார் வெளியிட்டார். முரண்பட்ட கருத்துக்களை அடுத்தடுத்துக் கூறுவதில் அன்பர் ஆச்சாரியாருக்கு ஈடு இணை வேறு யாரும் இருக்கமுடியாது முக்கியமானவர்கள் அடங்கிய அரசியல் வட்டாரத்தில் என்றே கூறிவிடலாம். அவர் ஓரிடத்தில் ஒரு கருத்தைக் கூறுவார்; அடுத்து வேறோர் இடத்தில் அதற்கு நேர் முரண்பட்ட கருத்தை வெளியிடுவார். முதலில் பாக்கிஸ்தான் பிரிவினை கூடாது என்று பேசினார்; அவரே பிற்பாடு பாக்கிஸ்தானைப் பிரித்துக் கொடுத்து விடலாம் என்று பேசினார். ஓரிடத்தில் கம்யூனிஸ்டுகள் தமது முதல் நம்பர் எதிரிகள் என்பார்; வேறோர் இடத்தில் திராவிட இயக்கத்தார் தமது முதல் நம்பர் எதிரிகள் என்பார். ஓரிடத்தில் பெரியார் நல்லவர் தமது ...ண்பர் என்பார்; மற்றோர் இடத்தில் பெரியார் கொடியவர் தமது எதிரி என்பார். இப்படிப்பட்ட இயல்பைக் கொண்ட அன்பர் ஆச்சாரியார்தான் மேற்கண்ட கூற்றைக் கூறியுள்ளார். சாதிகள் நாட்டிற்கு அவசியமில்லை என்று பல இடங்களில் பேசிய அவரேதான் சாதிகள் நாட்டிற்குத் தேவை என்பதுபோல் பேசியிருக்கிறார்.

அன்பர் ஆச்சாரியார் எதற்கெடுத்தாலும் ...வமை சொல்லி அதன்மூலம் பொருள் விளக்...ம் செய்யும் பண்பு படைத்தவர். அவர் ...றும் உவமைகள் மக்களை மயக்கும்: ஆனால் அவற்றில் பெரும்பாலானவை அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தி வருவதில்லை. சரா...ரி மனிதனுக்குக் கீழான அறிவுத்திறனைப் ...டைத்தவர்கள் அவருடைய உவமைகளை அப்படியே பொருத்தமானவை என்று ஏற்...க்கொள்ளவே செய்வர். அவ்வளவு சூழ்ச்...த் திறனை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் அவரது உவமான உவமேயங்கள். மேற்...ண்ட கூற்றிலும் அப்படிப்பட்ட சூழ்ச்சித்...றன்தான் உள் பொதிந்துகிடக்கின்றது.

மலர்த்தோட்டத்தில் பலவிதமான மலர்கள் இருப்பது அழகாகத்தான் இருக்கும். அது ...ால நாட்டில் பலவித சாதிகள் இருப்பது அழகாக இருக்கும் என்று அன்பர் ஆச்சாரி...ர் கூறியுள்ளார். நாம் பார்வையாளராக ...ருந்து பலவித மலர்களைப் பார்க்கும்போது ...படும் அழகு, அதுபோலவே நாமும் ...ர்வையாளராக இருந்து பலவித சாதிகளை ...ட்டில் காணும்போதல்லவா ஏற்படும்? நாம் ...ர்வையாளராக இல்லையே! ஆச்சாரியார் உள் ...அனைவரும் இந்நாட்டில் பல்வேறு சாதி...ாக அல்லவா கிடக்கிறோம்! ஆச்சாரியார் வேண்டுமானால் அகமகிழும் சாதியைச் சேர்ந்தவர் என்று கூறலாம்; ஆனால் பெரும்பாலோர் அல்லற்படும் சாதிகளைச் சேர்ந்தவர்களாக வல்லவா இருக்கிறார்கள்- அவர்கள் சாதிகளைப், பூக்களைப்போல கண்டுகொண்டிருக்கும் பார்வையாளராக இல்லையே! தாம் அல்லற்படுவதற்குக் காரணம் தம்மைப் பிரித்து வைத்துக்கொண்டிருக்கும் சாதிமுறைதான் என்று கோடானுகோடிபேர் எண்ணி, அந்தக் கொடிய முறையினின்றும் விடுபட கதறிக் கொண்டிருக்கும்போது, சாதிகள் இருப்பது நாட்டிற்கு அழகுதரும் என்று பேசுகின்றார் என்றால், ஆச்சாரியாரின் கூற்றில் எவ்வளவு நஞ்சு கலந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

மலர்களை சாதிகளுக்கும், பார்வையாளரை மக்களுக்கும் உவமையாக்கியிருப்பது உண்மை நிலைக்குப் பொருந்திவராததாகும். மலர்களையே சாதிகளுக்கு உவமையாக்கினார் என்று வைத்துக்கொண்டாலும், மலர்கள் ஒன்றிற்கொன்று தொடர்பில்லாமல், ஒன்றிற்கொன்று ஏற்றத்தாழ்வு கற்பித்துக்கொள்ளாமல், ஒன்றையொன்று தாழ்த்தி உயராமல் அல்லவா இருக்கின்றன. ஆனால் சாதிகள் அப்படியா இருக்கின்றன? ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் கற்பித்துக்கொண்டு ஒன்றையொன்று கொடுமைப்படுத்திக்கொண்டல்லவா இருக்கின்றன! மலர்களைச் சாதிகளுக்கு உவமையாக்குவது எப்படிப் பொருத்தமுடையதாகும்?

அழகான கருத்து என்று சொல்லக்கூடிய அளவில் மயக்கந்தரும் ஒரு உவமையைச் சொல்லி, மக்களின் உள்ளத்தை நெகிழவைத்துப், பிறகு பொருத்தமற்ற ஒரு உவமேயத்தை ஈடுபடுத்தி அதன் கருத்தை மறைமுகமாக நிலைநாட்டப் பார்க்கிறார் என்பதுதான் மேலே கண்ட கூற்றில் பெறப்படும் உண்மையாகும்.

பலவித மலர்கள் இருப்பது தோட்டத்திற்கு அழகாகத்தானிருக்கும்; ஆனால் பலவித சாதிகள் இருப்பது நாட்டிற்கு அழகாக இருக்காது; வேதனை தருவதாகத்தான் இருக்கும் என்பதைத்தான், நாம் அன்பர் ஆச்சாரியாருக்குக் காணிக்கை ஆக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

கைதுசெய்தால் வழக்காடக்கூடாது, சாமீனில் வரக்கூடாது என்றிருந்த தி. மு. கழகத்தின் தீர்மானம் என்னவாயிற்று?

1950-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்திற்கு மாநிலமாநாடு கூடும்வரையில்தான் கெடு வைக்கப்பட்டிருந்தது. 1951-ம் ஆண்டு இறுதியில் டிசம்பர் திங்களில் சென்னையில் கூடிய மாநிலமாநாட்டின் தீர்மானக்குழு, மேலும் அந்தத் தீர்மானத்தின் கெடுவைப் புதுப்பிப்பதா அல்லது அந்த நாளோடு முடிவடையச் செய்வதா என்று ஆய்ந்து பார்த்து மேலும் புதுப்பிக்க வேண்டாம் என்று முடிவுசெய்தது. எனவே மேற்கண்ட தீர்மானத்தின் காலம் மாநில மாநாட்டோடு முடிவடைந்துவிட்டது என அறிக.

∴ ∴ ∴

வடநாட்டுத் தலைவர்கள் வரும்போதெல்லாம் கறுப்புக் கொடி காட்டவேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட தீர்மானம் என்னவாயிற்று?

இதுவும் முன்னைய கேள்வியில் கண்ட தீர்மானம்போல் 1951-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற தி. மு. க. மாநில மாநாட்டோடு காலவரையறை எய்திவிட்டது. இந்தத் தீர்மானத்திற்கும் மாநில மாநாடுவரையிலுந்தான் கெடு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி மாநில மாநாட்டுக்கு முன்பு அரசாங்கச்சார்பான பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட வடநாட்டு ஆட்சிப்பீடத் தலைவர்களான திவாகர், ஆச்சாரியார், பண்டித நேரு, முன்ஷி, மெஹ்தாப் ஆகியோர்க்குக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. வடநாட்டு மத்திய ஆட்சியின்மீது கழகம் கொண்டிருந்த வெறுப்பைக் காட்டிக்கொள்வதன் அறிகுறியாகக் கறுப்புக்கொடி பிடிக்கப்பட்டது. அந்த நோக்கம் அந்தவகையில் ஓரளவுக்கு நிறைவேறிவிட்டதால், மாநில மாநாட்டின் தீர்மானக்குழு இந்தத் தீர்மானத்தின் காலத்தை மேலும் புதுப்பிக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை என்று முடிவு செய்தது.

∴ ∴ ∴

“டால்மியாபுரம்”, “கல்லக்குடி” என்று பெயர் மாற்றம் பெற்றுவிட்டதா? இல்லையா?

“டால்மியாபுரம்” என்ற பெயர், வடநாட்டு முதலாளித்வச் சுரண்டலின் அறிகுறியாகவும் வடநாட்டுப் பொருளாதார ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், அனுமதி (லைசென்ச்) பெற்ற வகையில் வடநாட்டு அரசியல் ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் அறிகுறியாகவும் விளங்குவதால்; அத்தன்மைகளைத் திராவிடம் எதிர்க்கிறது—திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்க்கிறது என்பதைப் பண்டித நேருவுக்கும், மத்திய அரசுக்கும், வடநாட்டுத் தலைவர்களுக்கும் வடநாட்டு வாணிகக் கோமான்களுக்கும் பிறர்க்கும் உணர்த்தவும், அதன்மூலம் தென்னாட்டு மக்களுக்குத் தெளிவும் உணர்ச்சியும் ஊட்டவும் “கல்லக்குடி” என்று பெயர் மாற்றப் போராட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிற்று. புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகையிலுள்ள “டால்மியாபுரம்” என்ற பெயரை அரசியலார் ‘கல்லக்குடி’ என்று மாற்றாவிட்டால், கழகம் தானே மாற்றும் என்று அரசியலார்க்கு எச்சரிக்கை விடுத்திருந்தது. குறிப்பிட்ட காலத்திற்குள் அரசியலார் கோரிக்கையை நிறைவேற்றாததால் கழகமே “கல்லக்குடி” என்று அச்சடிக்கப்பட்ட தாளை பெயர்ப்பலகையில் ஒட்டி, “டால்மியாபுரம்” என்ற பெயரை மறைத்தது. கழகத்தார் நிலைநாட்டிய ‘கல்லக்குடி’ என்ற பெயர்தான் இன்றுவரையில் காட்சியளித்து வருகிறது.

“கல்லக்குடி” என்று பெயர்மாற்றும் பொறுப்பை அரசியலாரே சட்டப்படி எடுத்துக்கொள்ளப்போவதாகத் தெரிவிக்கும் செய்தியை “இந்து” போன்ற இதழ்கள் வெளியிட்டன. பெயர் மாற்ற இணங்கியிருந்த மத்திய அரசாங்க அமைச்சரை, கோயங்கா போன்ற வணிகக்கோமான்கள் அணுகி முயற்சிக்கு முட்டுக்கட்டைப் போட்டுவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. பெயர் மாற்றம் செய்வதற்கான சூழ்நிலையை உணரும் மத்திய அமைச்சர், சென்னை அரசாங்கத்தால் விரைவில் செய்யப்படுவார் என்று சொல்லப்படுகிறது. ‘கல்லக்குடி போராட்டம்’ தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்குமேயானால், திராவிட முன்னேற்றக்கழகத்தின் கோரிக்கையை அனைத்திந்திய மக்கள் அறிவதற்கும், கோரிக்கையைக்கொண்டு தென்னாட்டு மக்கள் உணர்ச்சி பெறுவதற்கும் அது பயன்படத்தான் செய்யும். அந்த வகையில் நிலைமை வரவேற்கப்படவேண்டியதுதான். ‘கல்லக்குடி’ என்று கழகம் பெயரை மாற்றிவிட்டது; ஆனால் அரசாங்கம் இன்னமும் மாற்றவில்லை!

‘மன்றம்’ சந்தா விபரம்

	உள்நாடு	வெளிந
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8-
ஆறு திங்கள் ..	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5-



தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

கால்சட்டைக்கு அளவு எடுக்கும் முறை

(1-1-55 இதழ்த் தொடர்ச்சி)



(2) அடிங்கால் நீள அளவு

3-ல் இருந்து 4-வரை படத்தில் காட்டியபடி அடிங்கால் அளவு க்கவும். இருகால்களும் பிரியும் இடத்தில் (தொடையில்) ருந்து தரைவரை அடிங்கால் அளவு எடுக்கவேண்டும். நெடுங் ல் அளவில் மிதியடிக்கு எவ்வளவு கழிக்கப்பட்டதோ, அதே ளவு அடிங்கால் அளவிலும் கழிக்கவேண்டும். நெடுங்கால் ளவில் இருந்து அடிங்கால் அளவைக் கழித்தபிறகு வரும் ளவுதான் பொந்தால் இறக்கத்தின் (பாடி ரைஸ்) அளவாகும்.

(3) இடுப்புச் சுற்று அளவு

5-வது எண் உள்ள இடத்தில் இடுப்புச் சுற்று அளவு க்கும் முறையைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி, டுப்புச் சுற்று அளவு எடுக்கவேண்டும். நெடுங்கால் அளவு ப்பதற்கு எந்த இடத்தில் அங்குல நாடா முனையை வைத்து க்கப்பட்டதோ, அதற்குக் கீழ் $1\frac{1}{2}$ அங்குலத்தில் (இயற்கையில் மைந்துள்ள இடுப்பு பள்ளத்தில்) இடுப்பைச் சுற்றி அளவு க்கவேண்டும். அங்குல நாடாவை இறுக்கியோ அல்லது ர்த்தியோ பிடிக்கக்கூடாது.

(4) புட்டம் சுற்று அளவு

6-வது எண் உள்ள இடத்தில் புட்டம் சுற்று அளவு எடுக் ம் முறையைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி புட்டம் றறு அளவு எடுக்கவேண்டும். எந்த இடத்தில் புட்டத்தின் கம் பெருத்து இருக்கின்றதோ, அந்த இடத்தில் புட்டத்தின் சுற்று அளவு எடுக்கவேண் ம். இந்த அளவைக்கொண்டேதான் கால் சட்டையின் முக்கிய, அளவுகள் பிரிக்கப்படுகின் து. ஆகவே இந்த அளவை ஒழுங்காகவும், முறையாகவும், கவனமாகவும் எடுப்பது மிக முக்கிய னது.

(5) முழங்கால் சுற்று அளவு

7-வது எண் உள்ள இடத்தில் முழங்கால் சுற்று அளவுஎடுக்கும் முறையைக் காட்டு றது. படத்தில் காட்டியபடி முழங்கால் சுற்று அளவு எடுக்கவும். பொதுவாக முழங்கால் ளவு பாதத்தின் (பாட்டம்) அளவைக்கொண்டு கணக்கிடப்படுகின்றது. ஆகவே முழங்கால் றறு அளவு பாதத்தின் (பாட்டம்) அளவிற்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ளலாம்.

(6) பாதம் (பாட்டம்) சுற்று அளவு

8-வது எண் உள்ள இடத்தில் பாதம் (பாட்டம்) சுற்று அளவு எடுக்கும் முறையைக் ட்டுகின்றது, படத்தில் காட்டியபடி பாதம் (பாட்டம்) சுற்று அளவு எடுக்கவும், அணிப ரின் விருப்பத்திற்கு ஏற்றபடி அளவுகளைக் கூட்டியோ அல்லது குறைத்தோ எடுக்க ண்டிய அவசியம் ஏற்படலாம்.

Regd. No. M 6296

MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்த்தூள்

மன்னை சீயக்காய் தூள் REGD No. 13817

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :-வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம்

மலர்-2

1953-54

24 இதழ்கள் கொண்டது

அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட

வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப் படாமல் அனுப்ப ரூ. 6-0-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணா விதம் தபால்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, மன்றம்,
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

நம் நாடு

[தி. மு. க. வின் ஒரே நாள் இதழ்]

ஆசிரியர் : அறிஞர் அண்ணாதுரை

தி. மு. க. இளைஞரும், தி. மு. க. தோழர்களும் "நம்நாடு" வாங்குவதைத் தமது கடமைகளில் முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் கருதுவார்களாக!

"நம் நாடு" வளர்ச்சியே கழக வளர்ச்சி என்பதைக் கழகத் தோழர்கள் உணர்வார்களாக!

இன்றே "நம் நாடு"விற்குச் சந்தாதாரராகச் சேருங்கள்!

ஆண்டுக் கட்டணம்	ரூ.	24—0—0
ஆறு திங்கள் ,,	ரூ.	12—0—0
தனி இதழ்	ரூ.	0—1—0

நிர்வாகி, "நம் நாடு",
'அறிவகம்'
இராயபுரம் :: சென்னை-13.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1